
தமிழனே! உனக்குள் பிரகாசித்த
ஒளி எங்கே? - உன் முகத்தின்
அழகு கெட்டு விட்டதோ - உன் மனக்
கண்கள்
ஆமைக் கண்ணாக மாறி விட்டதோ.
- சில்லென்று
சிரிக்கும் உன் பற்கள் உடைந்தனவே
உன் உறுப்புக்கள் அழுகிய பழங்கள்
போல்
வாடியதேன் சொல் மனிதா!

குதூகலமாய் இருந்தோமே - இப்போ
துயருற்று அழுகிறோம் என்கிறாயா?
பெரும் தின்பண்டங்களை உண்டோமே
- இப்போ
பட்டினி கிடக்கிறோம் என்கிறாயா?
மற்றவர்களால் புகழப்பட்டோமே
- இப்போ
சிறுபான்மையினராய் ஒதுக்கப்பட்டோம்
என்கிறாயா?
இந்நிலை எங்கு செல்லும் என வாடாதே!

சுதந்திரமாய் சுற்றி திரிந்த
எம் வாழ்வில் - போர் எனும் கொடிய
பேய்
எம்மைத் தின்கிறது - மறுபக்கம் அதிகாரம்
எனும் ஆவேசம்
உடலை ஊடுருவுகிறது
- துஷ்பிரயோகங்கள
பெண்களின் கற்பைக் சூறையாடுகிறது
- ஊழல்கள்
எம் செல்வத்தை கொள்ளையாடுகிறது
- இவையே
எம் வாழ்வை சூறாவளியாக்குகிறது.

Welcoming the Tiny Tots of Grade 1 - 03.02.2009

The Gr. 2 'seniors' welcoming their 'juniors' with flowers

The Archdeacon, Ven. S.P. Nesakumar, unfurling the college flag

The Archdeacon cheering up the new comers

The principal welcoming the little ones

An entertainment programme by the Gr.2 kids

Welcoming the Grade 1 Kids - 02.02.2010

Arrival of the Archdeacon, Ven. S.P. Nesakumar

Unfurling of the college flag by the Archdeacon

The Grade 2 'seniors' entertaining their juniors with a song

கலங்காதே தமிழா
ஒரு கணம் சிந்தித்துப் பார்
ஒரு படி முன்னேறிப் பார்
கல்வி மீண்டும் வந்து சேரும்
செல்வம் மீண்டும் வந்து குவியும்
வசந்தம் வாழ்வில் மேலோங்கும்
உங்கள் கண்கள் பிரகாசிக்கும்.

உழைப்போம் உழைப்பாளியாவோம்
முன்னேற்றப் பாதையில் செல்வோம்
சமாதானமாய் வாழ்வோம்
வீசட்டும் வசந்தம் எம் வாழ்வில்
தமிழா! உன் இதயக் கதவை திறந்து விடு
சுதந்திரமாய் அதன் சிறகு விரியட்டும்.

ஆன் நிரோஷினி யூட் செல்வகுமார்
தரம் 11

அன்பு வேண்டுகோள்

இனியவளே!
எவரையும் நிமிர்ந்து பாராதே - உன்
விழிகளால் தோன்றும் விம்பத்தில்
என்னைக் கண்டுபிடித்து விடுகின்றனர்
உன் ஓர் விழிப்பார்வையே போதும்
நமது தூய அன்பை பறைசாற்ற.

நம் இனிய உறவுக்கு கறை(ரை) காண
இயலாத போலி மனிதர்கள் - அவர்கள்
முற்றுப் புள்ளியிட தவிக்கின்றனர்
கருவறையில் தோன்றிய - நம்
அன்பு கல்லறை வரையிலும் காற்புள்ளி
தான்.

மதம் பிடித்த வேழமும் - இந்த
மதவெறி பிடித்த மானிடரும் ஓரினம்
தான்.
நிஜத்தை நம்பாத - அவர்கள்
வெறும் நிழலை ஏற்பார்களா?
இச்சக தாலம் கொண்டவர்கள் அவர்கள்.
அழகினைக் கண்டு உறவு கொள்ளும்
அலட்சியவாதிகளான மனிதரது - ஒரே
இலட்சியம் நம்மை அழவைப்பதே.
ஈருயிர் இணைந்து ஓர் உயிரானது - நம்
இணைபிரியா அன்பினால் தானே.

என்னவளே!
இம்மடலின் வரிகள் - என்
உள்ளத்தின் குமுறல்கள்
வெற்றுக் கடதாசியாக எண்ணாமல்
- இதை
உயிருள்ள வரை உன் தோழியின்
அன்பான வேண்டுகோளாய் ஏற்றுக்கொள்.

ஜெபப்பிரியா உதயகுமார்
2012 உயர்தரம்

ஓ அராஜகமே...
ஓ அராஜகமே...

வேதனை எனும் நீரில் எமை
மூழ்கடித்துவிட்டு
சொல்லணா வேடிக்கை காட்டுகின்ற
விந்தை உலகில் மாய இருளைப்பரப்பி
விட்ட மூலப்பொருளே
அராஜகமே நீ இன்னும்
அடங்கவில்லையா?

வஞ்சனைப் பேய்களாக மனிதர்களை
மாற்றி
எம்மவர் பசுமை மனதில் வீட்டை
விதைத்து
மனித வாழ்வை மறந்து களமிறங்க
வைத்த
அராஜகமே... நீ இன்னும்
ஓயவில்லையா?

தேகம் கொதிக்குதடி மனம் மிக
வேதனை செய்குதடி
பாசம் மறந்த எம் உறவுகளை

இரத்தத்தில் மாய்த்து விட்டு - எம்மையும்
கண்ணீரில் மாய்த்து விட்ட கரியவிலங்கே
போதவில்லையா?

ஓ அராஜகமே... ஓ அராஜகமே...
உன் தாகம் தீரவில்லையா? - உன்
வேடிக்கை இராகங்கள் போதுமம்மா
எம்மரிய வாழ்வை வீணடிக்கலாமா?

மனிதர்களை முடமென எண்ணிவிடாதே?
மனிதன் நினைத்தால் உலகும் கையளவு.
கொடிய உன் வேகத்தை விட்டுவிடு
மனிதனை மனிதனாக வாழவிடு

மனிதர்கள் பாவத்தை சூட்டிக் கொண்டு
பவனி வரலாமென நினைக்காதே
அஞ்சினோர்க்கெல்லாம் தோழனென
நினைக்காதே
ஓம் சக்தி தோற்குமா? உன் சக்தி
வெல்லுமா?

துவண்டு போன மனித வாழ்வை விடியலாக்கி
ஒவ்வொரு மனிதனும் பிரகாசிக்க
வேண்டுமானால்
நீ விலகிச் சென்றுவிட இரங்குகிறோம்
ஓ அராஜகமே.....

ஓ அராஜகமே... ஓ அராஜகமே...
எம்மக்கள் பார்வைகள் பசுமையது
அதே பார்வைகளைச் சீண்டாதே -
எம்மவர்
வாழ்க்கை வெற்றி கரமாக்க துணைபுரிக..
நீ வென்றிடுவாய்

டனோஜா இராஜேஸ்வரன்
உயர்தரம் 2012

சிறையில் ஒடுங்கினேன்

பூட்டி வைத்தேன் - உன் ஸ்நேகங்களை
பொக்கிஷமாய் என் உள்ளத்தினுள்ளே,
பிரசவிக்காத குழந்தை போல்.
உன் இதயக் கருவறைதனில்
உன் உறக்கங்களை
தினம் தினம்
என் நட்பின் சுவாசங்களுடன்
தொட்டு பார்க்கின்றேன்.

மனதோடு ஒன்றிப்போன மௌனக்
குரல்களாய்
உன் ஸ்நேகங்கள்
என்னில் உதிர்த்து செல்லும் சுகங்கள்
என் பள்ளி வாழ்வில் நான் கண்ட
வரங்கள்.
பாறை இடுக்குகளில் வேர் கண்ட
பசுமரங்களைப் போல்
கருப்பு நிழல்லே கனாக்களாகிப் போன
- என்
விழிகளில் உன்னால் நான் கண்டேன்
வெள்ளொளிகள்.
என் பாதை எங்கிலும் பூக்களையே
பரிசளித்துப் போகும் - உன்
அன்பின் சுவாசத்தை
என் உயிரின் உயிரோடே
ஒன்றுபட கலந்து விட்டேனம்மா

என் பேனாக்கள் சிந்திச் செல்லும்
மைகள் இடையே - உன்
நட்பின் சின்னச் சின்ன குறும்புகள் தான்
கிறுக்கல்கள் கண்ட கவிதைகளாக
விழுந்தனவோ?
நானறியேன்
இருந்தும்
செந்தூரம் சிந்தும் தொடுவானமாய்
நீயிருக்க

தொட்டும் தொடமுடியா தொடுகடலாய்
ஆகிப் போகின்றேன் - நான்.
நம் பிளவுகளால்
பிரிக்க முடியாத எம் நட்பின் உயிர்
மூச்சுக்களை
உடல் பிரிந்தால் என்ன - எம்
உயிர் கொண்டு நாம் சுவாசிப்போம்.
தொலை தூரம் சென்றாலும்
உனக்காக நானும்,
எனக்காக நீயும்,
என் விழிகளோடு மிதந்து செல்லும்
உன் நட்பு தந்த ஞாபகங்களை
மறுபிறப்பிற்காய் எடுத்து செல்கிறேன்.
ஏனெனில்
என் உயிர் துடிப்பின் நாதங்களுடன்
- உன்
பாசங்களை கவர்ந்து - உன் மனம்
சொட்டிச் செல்லும் வெள்ளி மழைத்
தூறல்களான
உன் நட்பின்
புனித சிறையினுள் நான் ஒடுங்கிக்
கொண்டதனால்

காரணி ஞானசேகரம்
2012 உயர்தரம்

தொலை தூரத் தென்றலுக்காய் காத்திருப்பவர்கள்

அதோ! வீசுகின்றது ஓர் தென்றல்!
தூரத்தே சற்றுத் தூரத்தே வீசுகின்றது
ஓர் தென்றல்
வந்து போகின்ற வாடைக்
காற்றிலெல்லாம்
சற்று எட்டிப் பார்க்க முனைகிறது
இளம்கீற்று!
மௌனமாய் வந்து வாசலைத் தட்டிவிட்டு
- வந்து
வாசனையைக் கூடத்தராது மௌனித்து
விடுகின்றது!
அடி மனதிலேயிருந்த கனவுகளெல்லாம்
புஸ்வானமாகி மௌனித்துப் போய்விட
தொலை தூரத் தென்றலுக்காய்
காத்திருப்பவர்கள் நாம்!

கண்களில் தேங்கயிருக்கும் ஏக்கத்தில்
- சற்றே
எட்டிப் பார்க்கும் ஓர் மின்னல்!
''ஐக்கிய இலங்கைக்குள் அரசியல்தீர்வு"
எனக்கூறி
அலைக்கடிக்கும் அழகான வார்த்தைகள்
- தரும்
நம்பிக்கையில், உறைந்து போய் விட்ட
மனம்
சற்றே உயிர்ப்புப் பெற
தொலைதூரத் தென்றலுக்காய்
காத்திருப்வர்கள் நாம்!

கட்டிய கணவன், பெற்ற பிள்ளையைப்
பறிகொடுத்த சோகத்தில்
தொலைந்து போய்விட்ட மனத்தை
உறங்கிப் போய்விட்ட மனிதத்தை
உயிர் பெறச் செய்வதற்கான
தருணத்திற்காய்
வழி மேல் விழி வைத்து காத்திருக்கும்
சந்தர்ப்பத்தில் கூட,
தொலை தூரத் தென்றலுக்காய்
காத்திருப்பவர்கள் நாம்!

யுத்தம் தந்த கொடூரத்தில்
மீண்டு விட முன்னரே
அகதி முகாங்களிலே அடைப்பட்டுக்
கிடக்கும் - சோகம்
சுதந்திர காற்றுக்காய் ஏங்கும் - மனம்
நிசப்தம் தரும் மௌனத்தில் - கூட
தொலைதூரத் தென்றலுக்காய்
காத்திருப்பவர்கள் நாம்!

கொலைக் களததிலே பலி
கொடுத்துவிட்ட
ஓராயிரம் நம் சொந்தங்களின் நினைவுச்
சுமைகளைச்
சுமந்தபடி கனக்கும் நம் மனங்களிலே
உறைந்து போய்விட்ட துயரச்
சம்பவங்களை
இன்றும் சுமந்தபடி
தொலைதூரத் தென்றலுக்காய்
காத்திருப்பவர்கள் நாம்!

துயரங்கள் விடுவதில்லை
துன்பங்கள் தொடர்வதில்லை
வீச வேண்டிய தென்றல் என்றோ - வீசும்
வாடைக் காற்றாய்.
நம்பிக்கை தரும் சுகத்திலே,
தொலைதூரத் தென்றலுக்காய்
காத்திருப்போம் நாம்!

கஜானனி ஏகானந்தசிவம்
உயர்தரம் 2011

தீர்மானியுங்கள்!

எங்கோ ஒரு மூலையில்
அழுகிறது ஒரு குரல்
ஏன்...? எதற்காக...?
விடையில்லாக் கேள்விகளாய்
தொடர்கின்றன கணைகள்!

துவண்டு போன மனங்களின்
ஓலங்கள் ஒலிக்கிறது வான் பிளந்து
காரணம் ஏனோ...!
புரியாத புதிராய்
வலம் வரும் ஏக்கங்கள்!

மனிதா !
உன் விந்தைக்கு ஒரு சவால்!
நீ வித்திட்ட வினைக்கு
விடை காணப்போவது யார்?
புறப்படு இன்றே விடை தேடும்
பயணத்திற்காய்..!

கண்டங்களையும் நாடுகளையும்
கண்டோம்; மகிழ்ந்தோம் - அன்று
உடல் துண்டங்களையும் வெற்றுக்
காடுகளையும்
கண்டோம்; வெந்தோம் - இன்று

உயர்ந்து நிற்க மனிதங்கள் வேண்டிய
தலை சாய்த்து உறங்குகின்றன
கல்லறைகளாய்.
கல்லறைகள் மீண்டும் கருவறையாகுமா!
இல்லை
எம் வாழ்வு தான் விடிந்திடுமா?
துயரம் தாங்காது வற்றிப்போனது கண்ணீர்.
துன்பம் பொறுக்காது வெம்பின
மனங்கள்.

எண்ணங்கள் சிதறின; ஏக்கங்கள்
உயர்ந்தன
புண்பட்ட மனிதங்கள்; போராடின
விடிவுக்காய்.

தருணம் பார்த்து தாக்குகின்ற நீ
இக் கணம் தீர்மானி...
ஏன் இந்த அவலங்கள்?
ஏன் இந்தக் கொலை வெறி?

தகர்த்தெறி உன் தன்மான வேட்டுக்களை
போராடு எம் மனிதங்களின் விடிவுக்காய்.
நிம்மதியைத் தொலைத்து விட்ட நாம்
நிர்க்கதி அடையக் கூடவே கூடாது
நிமிர்ந்து நில்; துணிந்து செய்.

பேதை மனங்களின் ஓலங்கள் மறைய
வேண்டும்
வேய்ங்குழலோசை எங்குமே
தவழவேண்டும்
உன் தீர்மானம்... உனக்காக மட்டுமல்ல
உன் போன்ற எண்ணற்ற
ஜீவன்களுக்காய்.

The Primary School Prefects' Guild – 2009

Seated (L – R) Mrs. S. Jeyarajasingam (Supervisor), Hishonia Muthukumar (Head Girl), Mrs. D. Thuseetharan (Principal), Mathangi Logeswaran(Games Captain), Mrs. R. Sahayaseelan (Vice Principal).

Standing 1st Row (L – R) Deianira Rajan, Srikowshini Sritharan, Seroonia Guneswaran, Mariya John, Deloshiga Rajkumar, Lathanki Kugathasasarma, Birinthika Thamilchelvan, Ann Dilani Luxshika Lathismans, Keerthana Anton Vimalathasan.

Standing 2nd Row (L – R) Arulshini Jeyaline Alphonse, Gowthami Gowrithasan, Thadsika Tharumarajah, Thanusa Prabaharan, Priyanka Thavanesan, Gowthamy Eyusebius, Rebeka Dixon St. George.

The Primary School Prefects' Guild – 2010

Seated (L – R) Mrs. S. Jeyarajasingam (Supervisor), Roxshana Ravichandran (Games Captain), Mrs. D. Thuseetharan(Principal), Wasana Madhubhashini Wimal(Head Girl), Mrs. R. Sahayaseelan (Vice Principal).

Standing 1st Row (L – R) Nirosha Vivekananthan, Mathusha Uthayakumar, Thaniya Priyamaria Nesakumar, Aranciya Jesunayagam, Roshni Angelin Vilvarajasingam, Tharmina Nirmalaraj, Ann Jency Amalanathan, Sangavi Ravi, Sarvika Annamalai.

Standing 2nd Row (L – R) Kishany Ragavan, Anisha Jude Jokimson, Arthy Jeyaruban, Clare Stephi Kingsly Robert, Danusja Suthakaran, Evanshaline Arasakumaran, Ataby Jeyaruban, Christina Angel Aaran, Princy Thavachelvam.

விடிவுக்காய் ஏங்கும் மனங்களுக்கு
வேண்டும் உன்னால் ஒரு விடியல்
ஏங்கித் தவிக்கிறோம்
உன் தீர்மானப் புயலுக்காய்.
அது வசந்தமாய் மாறும்
என்ற திடமான நம்பிக்கையில்...

கீர்த்திகா சிவலோகநாதன்
உயர்தரம் 2011

தொலை தூரத் தென்றலுக்காய்க் காத்திருப்பாள்

கண்ணீரின் கால்தடங்கள்
கண்களின் போலி வேடங்கள்
கயவர்களின் கல்லடிகள்
உற்றாரின் சொல்லடிகள்
ஊரவரின் அலர்தூற்றல்கள்
இருப்பினும் காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்!

அன்னையின் அன்பு போதவில்லை
தந்தையின் பாசம் எட்டவில்லை
தம்பியின் வார்த்தையில் ஈரமில்லை
ஆதரிக்க அக்காளில்லை
தமையன் என்றொருவன் அவளுக்கில்லை
வேண்டியது வேண்டிக் காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்!

இல்லம் நிறைந்திருந்தாலும் - அவள்
உள்ளம் நிறையவில்லை
கனிவுகள் இருப்பினும் - அவை
எவற்றிலும் உண்மையில்லை
உறவு என்று சொல்லிப் பலர் - அவள்
உள்ளத்தை சல்லடையாக்கினும்
காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்!

நிமிடங்கள் என்றுமே வருடங்கள்
- அவள்
வதனம் கண்டது கண்ணீர் மட்டுமே
நண்பர்கள் வந்தனர் நடிகர்களாய் - தம்
நாடகம் முடிந்ததும் விட்டுப் போயினர்
ரணங்களின் தடங்கள் அவள் மனதில்
பதியினும் பதறாது காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்!

உலகினில் உருவம் ரசிப்போர் - பலர்
அவள் உள்ளம் உணரவில்லை
உருவத்தைப் பார்க்கும் மானிடர்
- அன்றவள்
உள்ளத்தை மதித்திருந்தால்
உடலிழந்து உளம் சோர்ந்து அவள்
வாடவேண்டியதில்லை
இருப்பினும் கண்ணீரால் காயங்கள்
ஆற்றிக் காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்.

சொல்லில் விடம் வைத்த மனிதர் - அவள்
நெஞ்சிலும் ஈட்டியைப் பாய்ச்சினர்
குருதியின் அலறல் கண்டு
உதித்தது ஒரு அன்புக் கரம்
தாலாட்டும் இனிய பாசத்திற்காய்
எத்தனை யுகமும் காத்திருப்பாள்
அத் தொலைதூரத் தென்றலுக்காய்!

அன்பினை இன்று பாராக்கும் விழிகள்
பல பயனற்ற பார்வைகளாக்குகின்றன
அத்துணை தடைகள் கடந்தும் - இனி
எத்துணை இடர்கள் வரினும்
எதையும் தாங்கும் இதயத்தை
தனது உடைமையாக்கிக் காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்.

நிஜங்கள் பொய்த்துப் போனாலும் - அவள்
நினைவுகளை என்றும் மறக்கப்
போவதில்லை.
அவள் நிழல் கூடத் தூய அன்பிற்கே
சாயும்.

இல்லையேல் இந் நிலைகெட்ட மானிடர்
மத்தியில்
மண்ணிலே அவள் உடல் சாயும்
இருப்பினும் நம்பிக் காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்!

களவாடும் கண்கள் - அவள்
உளம் நாடியிருந்தால்
சடம் ஆக வேண்டியதில்லை - அவள்
மென்மை மனம்.
கால்கள் சோர்ந்தாலும் காலமெல்லாம்
காத்திருப்பாள் கண்ணீரோடு
அத் தொலைதூரத் தென்றலுக்காய்!

காலங்கள் மாறினாலும்,
கோலங்கள் சிதைந்தாலும்,
தோற்றங்கள் குலைந்தாலும்,
துன்பங்கள் சூழ்ந்தாலும்,
உடலது மரித்தாலும் - அவள்
உயிரதை மறவாது காத்திருக்கும்
தொலைதூரத் தென்றலுக்காய்!

கண்கள் காயும் வரை,
கண்ணீர் ஆறும் வரை,
உள்ளம் சோரும் வரை,
உணர்வுகள் சாகும் வரை,
பூமியது உள்ள வரை,
பூவாகக் காத்திருப்பாள்,
தொலைதூரத் தென்றலுக்காய்.....!

சிவாஜினி சிவபாலன்
உயர்தரம் 2011

அன்னை

அதிகாலைப் பொழுது, விடிய லுக்கான ஒத்திகை நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. உறக்கம் எனும் போர்வை யில் இருந்து தமிழேந்தியால் முழுமை யாக வெளிவர முடியவில்லை. ''டேய் அப்பு! ராசா எழும்படா, மணி ஆறரை ஆகுது; பள்ளிக்கூடம் போக வேண் டாமே; எழும்பு அப்பு'' என்ற இராசாத்தி யின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து சில மில்லி மீற்றர்கள் விழியை திறக் கிறான் தமிழ். ஓலைக் குடிசையின் விரி சலால் வந்த சூரியனின் பொற்கதிர் 'சுள்' என்று அவன் முகத்தில் அடித்தது. கலைந்த முடியும் கிழிந்த புடவையுமாக அவனது அன்பு அம்மா இராசாத்தி அவன் முன் நிற்கிறாள்.

தனது நிலையையும், நேரம் சென்று விட்டதையும் உணர்ந்த அவன் கிணற்றடி நோக்கி விரைகிறான். காலைக கடன்களை முடித்து விட்டு வந்து அவ சரம் அவசரமாக பழைய சோற் றையும் வெங் காயத் தையும் உண்டுவிட்டு பள் ளிக்கு விரைகிறான். அவன் கால்கள் தான் முன்னோக்கி நடக்கின்றன. அவ னது மனமோ இரண்டு வருடங்கள் பின் னோக்கி நகர்கிறது.

தமிழேந்தி இராசாத்திக்கும் கண்ணாயிரத்திற்கும் ஒரே பிள்ளை. செல்லப்பிள்ளை. ஈழத்தின் வடபால் அமைந்த காடு வனாந்தரம் சூழ்ந்த முல் லைத்தீவு மாவட்டத்திலே அமைந்திருந்த மல்லாவி என்ற சிற்றூரிலே தமிழேந்தி யின் குடும்பம் வாழ்ந்து வந்தது. ஆகா! ஓகோ! என்று வசதியாய் வாழாவிட்டா லும் மகிழ்வாக ஒரு நடுத்தர வாழ்க் கையை வாழ்ந்து வந்தனர். தென்றல் போல இருந்த அவர்களது வாழ்க்கை திடீரென புயலாக மாறத் தொடங்கியது. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு நம்மை

எல்லாம் உருக்குலைய வைத்த யுத்தம் எனும் கோர அரக்கன் தமிழேந்தியின் வாழ்வில் உருத்திர தாண்டவம் ஆடிச் சென்றான். யுத்த அரக்கனின் கோரப் பசிக்கு அன்புத் தந்தை கண்ணாயிரத்தை பலியாகக் கொடுத்த தமிழும், இராசாத் தியும் இடம் பெயர்ந்து வவுனியா நலன் புரி முகாமிற்கு வந்து ஆறு மாதங்களின் பிற்பாடு யாழ் மாவட்டத்தில் மீள் குடி யேற்றப்படுகின்றனர்.

இப்பொழுது தமிழேந்தி சிறிய ஒரு கிராமப் பாடசாலையில் தரம் பதின்மூன்று வர்த்தகப் பிரிவில் படித்து வருகிறான். தந்தையை இழந்தபின் அன்பு அன்னை இராசாத்தி தமிழை தன் கண்ணின் மணி போலக் காத்து வருகிறாள். தான் வருந்தினாலும் அவள் தன் தனையனை ஒரு போதும் வருந்த விடுவதில்லை. கூலி வேலை செய்தும், அயல் வீடுகளில் வீட்டுவேலை செய்தும் தன் மகனை வறுமையிலும் செம்மை யாக வளர்க்கிறாள், அவனைப் படிக்க வைக்கிறாள்.

அக்டோபர் மாதம் வந்தது, உயர்தர பரீட்சைகள் ஆரம்பமாகின. பரீட்சையை திருத்தமாகவும் திருப்தியாக வும் எழுதிய தமிழ் ஏனோ பல்கலைக் கழகம் செல்வதற்கு ஏற்ற புள்ளியைப் பெற முடியவில்லை. ஏழைப் பிள்ளை கள் படிப்பது கடவுளுக்கே பொறுக்க வில்லை போலும். ஒரு சில மாதங்கள் கடந்தன. தமிழுக்கு வெளிநாடு சென்று உயர்கல்வி பெற வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் என்ன. கையில் பணம் இல்லை அன்னை இதனை அறிந்தாள். திகைத் தாள். மகனுக்கு உதவமுடியவில்லையே என்ற வேதனை அவளுக்கு. இரவும் வந்தது.

படுத்தாள் தூக்கம் வரவில்லை. அவளது எண்ணமுழுவதும் தன் மகன் எதிர்காலத்தை பற்றியே இருந்தது. தான் இறந்தேனும் தன் மகனை வாழவைக்க வேண்டும் என நினைத்தாள். இறப்ப தற்கு அவள் அஞ்சவில்லை. கிடந்தாள், புரண்டாள், உருண்டாள், ஏங்கினாள், அழுதாள், தூங்கினாள். ஆம் தூங் கினாள். இனிமேல் கண் விழிக்காத அளவுக்குத் தூக்கம். மரண நித்திரை செய்தாள்.

அதிகாலை அவள் இறப்பை அறிவிக்க சேவல் அழுதது. மாரியும் அழுதது. என்ன செய்ய. எல்லாம் முடிந்து விட்டது. தமிழேந்தியால் அவனது அன்னையின் இழப்பை தாங்க முடிய வில்லை அழுதான்., கதறினான். அவ்வேளை வந்தது ஆஸ்பத்திரியில் இருந்து ஒரு அன்புலன்ஸ் வாகனம் அவர்கள் சொன்னது இதுதான் ''மிஸ்டர் தமிழேந்தி உங்கள் அம்மா தனது கண், கிட்னி முதலிய உறுப்புக்களை உங்கள் படிப்புச் செலவுக்காக எங்களுக்குத் தந்துள்ளார்" அவனது இதயமோ வெடித்து விடும் போலிருந்தது. தனக்காக இருந்து, தனக்காக வாழ்ந்து, தனக்காகவே இறந்த அன்பின் சிகரம் அன்னையைக் காண அவனுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. விம்மினான், முன கினான் அன்னையின் முகத்தை நோக் கினான். ''அம்மா உன் அன்பிற்கு ஏது எல்லை உன் அன்பு சொல்ல வார்த்தை இல்லை" மனதிற்குள் நினைத்தான். வார்த்தை வெளிவரவில்லை.

சஜீவா ஜெயக்குமார்
தரம் 10

வாழ்க்கைப்பாதையில் சில துளிகள்

கிழக்கடிவானம் செக்கச் சிவந்து வர, அலை பாயும் சிறு நதிகள் இனிய ரிதம் இசைக்க, செம்பொற்கரணம் நீட்டிய படி ஆதவன் மாறா நம்பிக்கையுடன் மலர்ந்த புன்னகையுடன் வெட்கித் தலை குனிந்து வர, பிரிவால் யுகம் கடந்து புதிதாய் காணும் தாயை எந்தவித சலனமுமின்றி உறங்கிக் கிடந்த பட்சி கள் மோனப் புன்னகையுடன் வர வேற்கும் காட்சியை சூரியனைக் கண்ட வுடன் பறவைகள் எள்ளி நகையாடும் காட்சிக்கு ஒப்பீடு செய்து பார்க்கின்றேன். இவை யாவும் நிஜந்தான் என்ற நம்பிக் கையுடன் விழித்தெழும் எனக்கு மேலும உற்சாக மூட்டுவனவாய் அமைந்தன அருகிலிருந்த கோயிலில் ஒலித்த மணி யோசையும் சுப்பிரபாதமும் தான். இவற்றை உள்ளன்போடு ரசித்தவாறு என் கடமை களைச் செய்யப் புறப்படுகின்றேன்.

என் கடமைகளையெல்லாம் முடித்துக்கொண்டு என் மேசையில் போய் தேனீர் கோப்பையுடன் உட்காரு கின்றேன். அவ்வாறே அருகிலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து மெல்லப் புரட்டுகின்றேன். என் மேசையிலிருந்து புத்தகத்தை கைகள் தான் புரட்டியதே தவிர என் உள்ளம் என் வாழ்க்கையினு டைய புத்தகத்தின் சில பக்கங்களை புரட்டத் தொடங்கியது.

ஒரு அழகிய கிராமம். அக்கிரா மத்தின் மத்தியில் அழகிய ஒரு சிறு குடிசை அதிலே அன்பிற்கும் பண்பிற்கும் குறைவில்லாது வாழ்ந்து வந்தவர்கள் தான் பொன்னியம்மாவும் இராசையாவும். இருவரும் இனிதாக உலகம் என்னும் ஆழியிலே வாழ்க்கை என்னும்ஓடத்திலே பயணித்துக் கொண்டிருந்தார்கள். அமைதியாகவும் ஆனந்தமாகவும் இன்ப மாகவும் இனிமையாகவும் கழிந்தது அவர்கள் வாழ்க்கை. எனினும் வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் பிணைந்து உருவாகியது தானே. இதுதான் உலக நியதியும் கூட. அவர்கள் வாழ்க்கையில் அழியாச் சோகம் என்னவென்றால் வாழை யடி வாழையாக தழைத்து செழித்து வாழ தலைமுறையில் ஒரு வாழை குறைந்தது போல், அவர்கள் வாழ்க் கையில் பிள்ளைச் செல்வம் என்ற ஒளிம யமான அந்த செல்வம் அவர்களுக்கு எட்டவில்லை. ஆனாலும் அந்த துன் பத்தை மறந்து இருவரும் மகிழ்ச்சியாக வாழ்க்கையில் பயணித்துக் கொண்டி ருந்தார்கள்.

அமைதியாகவும் சாந்தமாகவும் பயணித்துக்கொண்டிருந்த அவர்களது வாழ்க்கை ஓடம் காலனின் வலையில் சிக்கி அகப்பட்டு சுக்குநூறாகிப் போனது. அதிலிருந்து எதிர்நீச்சல் போட்டு ஒரு வரை ஒருவர் இழந்து தவிக்கும் அந்த அவல நிலையிலும் விதவைக் கோலத் தோடு மீண்டும், தன் வாழ்க்கைப் பாதியை தொலைத்துவிட்டு தன் உறு துணையாய் இருந்து வந்த ஒரு சுவரை இழந்து விட்டு வாழ்க்கையை நடத்தி வந்தாள்.

அப்போது அவளுடைய வேத னைக்கும் சோதனைக்கும் மருந்தாக கிடைத்த அந்த அற்புத பரிசு தான் மாலா. மாலா ஒரு அநாதைக் குழந்தை. அக்குழந்தையை அவளை ஈன்ற தாய் பரிதவிக்க விட்டு விட்டுச் சென்றுவிட்டாள். அந்த இனிமையான பரிசைப் பெற்றவள் தான் பொன்னியம்மா.

The Parents' Day & Prize Giving of the Primary School - 24.10.2009

Those on the stage

Prize Distribution
Mrs. Abiramy Sivaruban,
Asst. Lecturer,
Faculty of Agriculture,
University of Jaffna.

The Chief Guest's Address
Mr. R. Sivaruban,
Project Accountant,
NECORD, Jaffna.

Tamil Action Song - Grade 1

Percussion Band - Grade 2

Drill Display - Grade 3

English Action Song 'Nelly the elephant' - Grade 4

Tamil Drama 'மறுத மனம்' – Grade 5

Folk Dance - Grade 5

English Playlet - 'Cinderella'
Grade 4

அவள் அக்குழந்தையை கண்ணை இமை காப்பது போலக் காத்து கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மாலா வளர்ந்து வந்தாள். அவளை வளர்த்து படிப்பித்து இன்பமாய் வாழ்ந்து வந்த அந்த பொன்னியம்மாள் வாழ்க்கையை, நாட்டின் போர்ச் சூழல் விட்டு வைக்கவில்லை. அவளது வாழ்க்கையை குண்டு முனைகள் பதம்பார்த்துக் கொள்கின்றன. அவளை இழந்து தவித்த மாலா தான், வாழ்க்கையில் சாதிக்க வேண்டும். வாழ்க்கையின் இறுதிப் படியையும் அடைய வேண்டும் என்ற நோக்கில் விடா முயற்சியுடன் கற்று வந்தாள். கற்று கரையை அடைந்து விட்டாள். தற்போது ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளராக கடைமையாற்றும் மாலா இப்பவும் ஒரு சிறுபிள்ளை. அவள் தன் உறவுகளை எல்லாம் இழந்து தவிக்கும் அந்த தவிப்பு எல்லையற்றது. வளர்ந்து மணப்பருவத்தை அடைந்த அவள் தன் வாழ்க்கைத் துணையை தானே தெரிவு செய்து கொண்டாள். அரவிந் என்பவரை கரம் பற்றி இன்பமாக வாழ்ந்து வந்தாள். அவள் ஒரு அதிஷ்டம் இல்லாதவள் என்று கூடச் சொல்லாம். அவளின் வாழ்க கைத் துணையையாவது அவளிடம் விட்டுவைக்கவில்லை. அமைதியாக வாழ்ந்து வந்த அவளின் கணவன் அரவிந் கொடிய புற்று நோயால் பீடிக்கப்பட்டு அவளை விட்டு மரித்து விட்டான்.

தாயை இழந்து கணவனை இழந்து வாழ்க்கையில் அன்பு செலுத்த இருந்த அனைவரையும் இழந்து கடைசியில் அன்பையும் இழந்து வேலைதான் கதி எனக்கிடக்கும் அவளுக்கு ஆறுதல் யாரோ தெரியவில்லை?

தன் வாழ்க்கையை நினைத்து நினைத்து உருகி அழ கண்ணீர் இல்லாமல் இருக்கும் அவளின் அவல நிலை தான் என்னே?

என் வாழ்க்கைப் பாதையின் பக்கங்களை புரட்டி என் வாழ்வை மீட்டிப் பார்த்த நான் வேறு யாரும் இல்லை அந்த மாலா தான் நான். இன்று கிளை களற்ற பட்ட மரமாகி தவிக்கும் எனக்கு ஆறுதல் சொல்ல யார் தான் வருவாரோ எனக் காத்திருக்கும் என் உள்ளம் அமைதியடையும் நாள் எதுவோ...?

காயத்திரி கண்ணன்
தரம் 10

அந்த ஒரு நாள் அவளது வாழ்வில்

கோயில் மணியின் கணீர் கணீர் என்ற ஓசையுடன் பக்திப்பாடல்களும் சேர்ந்து ஒலிக்கவே காதினை இரண்டு கைகளினாலும் பொத்திக்கொண்டு மீண்டும் புரண்டு புரண்டு நித்திரை செய்தவள் தாயாரின் குரலும் அவளின் காதில் விழாத வண்ணம் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு புரண்டாள் கீதா. ஆம் அது மார்கழி மாத விடுமுறை நாள். வேறொன்றும் இல்லை. கீதாவின் தாயார் ஒரு பொறுப்புள்ள அம்மா. தந்தையார் ஒரு பொறுப்புள்ள வேலையில் உள்ளார். ஒரேயொரு பெண் பிள்ளை அவளும் செல்லமாக

வளர்ந்து விட்டாள். பெற்றோரும் அவளைச் செல்லமாக வளர்த்து விட்டனர். வருவாய்க்கேற்ற செலவுடன் வாழும் கருக்குடும்பம். காலம் செய்த கோலம் கீதாவையும் விட்டுவைக்க வில்லை, அவளையும் நிலைகுலைய வைத்தது.

கீதாவின் இராச்சியம் தான் அவளது வீட்டில். அவளைக் கண்டிப்பதற்கு எவருக்கும் மனம் வரவில்லை. கீதா பெண்பிள்ளை; அவள் வீட்டில் என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்வர் பெற்றோர். வீட்டில் செய்யும் குழப்படிகளை பிள்ளை வெளியிலும் செய்தால் பார்ப்போர் நாசுக்காக நாலு வார்த்தை அவளைக் குற்றஞ் சொல்வர்.

கீதா வளர்ந்து விட்டாள் ஆனால் அவளின் இயல்பில் எதுவிதமான மாற்றமும் இல்லை. குடும்பத்தின் பெருமைக்கு எவ்வித இழுக்கும் வராமல் காக்கவேண்டிய அவளே தன் கையால் தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டாள்.

அன்றைய நாள் அவளது வாழ்வைக் கேள்விக்குறியாக்கியது. தெருவில பந்தடித்து விளையாடும் வாலிபர்களுடன் தானும் ஒரு ஆடவர் போல் சிரித்துப்பேசி கூத்தடித்தாள் அவள்.

ஒழுக்கம் என்பது வாழ்வில் பிறந்த ஒவ்வொரு மனிதருக்கும் அவசியம். ஆனால் ஒரு பெண்ணைப் பொறுத்தவரையில் அவள் ஒரு சிறு விஷயத்தில் தவறு செய்யினும் அது அவள் வாழ் நாள் முழுவதும் படிந்த மாசாகக்கறையாகக் காணப்படும்.

கீதாவைப் பார்த்து ஊரே காறித் துப்பியது. கீதா இவ்வாறு அவமானப் பட்ட செய்தி காற்றுப்போல ஊரெங்கும் பரவியது. எல்லா வீட்டுப் படலைகளையும் தட்டிய செய்தி கீதாவின் வீட்டுப் படலையைத் தட்ட மறந்துவிடவில்லை. ஊரார்கள் அந்த அப்பாவித்தந்தை, தாய் மீது பழி வார்த்தைகளை அள்ளி வீசினர். ஒரேயொரு மகள் ஆசை மகளென மார்ப்பிலும் தோளிலும் வைத்து சீராட்டி வளர்த்த மகள் இவ்வாறு நமக்கொரு அவப்பெயரைப் பெற்றுத்தருவாள் எனக் கனவிலும் எதிர்பார்த்திராத தந்தை மார்பைப் பிடித்த வண்ணம் மண்ணில் சாய்ந்தார். தாயும் அடுத்த நொடியே தூக்கில் தொங்கினாள்.

இவை எவற்றையும் சற்றும் அறியாத, எதிர்பாராத கீதா அம்மா அப்பா என்றுகொண்டு உற்சாகமாக கதவைத் தட்டினாள். அம்மாவும் அப்பாவும் இருந்தார்கள், ஆனால் அவர்களின் உயிர் தான் அவர்களின் உடலிலில்லை. பாவம் அவளுக்கு இன்னமும் தான் காரணம் புரியவில்லை. பின் நாள் செல்லச் செல்ல தன்னைத் தானே அறிந்தாள். இவ்வாறான பழியுடன் அவளால் ஊருக்குள் நடமாடவும் முடியவில்லை.

தெளிந்தாள், ஒழுக்கம் என்பது மனித வாழ்வில் எவ்வளவு மகத்தானது என்பதை உணர்ந்தாள். தினம் தினம் பழிச்சொற்களையே ஏந்தி வாழ முடியாது என்பதையுணர்ந்தாள். மானமெல்லாம் போனபின் வாழ்வது தான் ஒரு வாழ்வா! யோசித்தாள் வழி தெரிய வில்லை. முடிவு தனது தாய் தந்தையர் சென்ற இடத்திற்கு அவளும் சென்று விட்டாள்.

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''

சிந்துஜா
இராஜேஸ்வரன்
தரம் 11

ஒழுக்கமே உலகம்

ஒவ்வொரு மனிதனும் இப் புவி யினிலே காலடி எடுத்து வைக்கும் போது அவன் அறிவு படைத்தவனாகவோ அல்லது ஒழுக்கத்திலும் நல்ல பழக்க வழக்கங்களிலும் சிறந்தவனாகவோ தோற றம் பெறுவது இல்லை. இவையெல்லாம் வளர வளரத்தான் எம்மால் உணரப் பட்டு வெளிக்காட்டப்படும். அந்த வகை யில் ஒழுக்கமானது ஒரு மனிதனின் உயிரினை விட மேலாக ஓம்பப்பட்டு வருகின்றது.

ஓர் பாடசாலையில் கல்பனா, காஞ்சனா என இரு மாணவிகள் கல்வி கற்று வந்தனர். அவர்கள் எப்போட்டியிலும எவ் நிகழ்ச்சியிலும் முதலிடம் வகித்து வந்தனர். கல்பனா நன்றாகக் கல்வி கற் பவள், காஞ்சனா கல்பனாவை விட தான முன்னேற வேண்டும் என்ற போட்டியும் பொறாமையும் கொண்டவள். காஞ்சனா விடம் சிறு திருட்டுத்தனமும் உண்டு.

காஞ்சனாவிற்கு கல்பனா மேல் எரிச்சலும் பொறாமையும் அதிகமாகும் சூழ்நிலையில் கல்பனாவைக் காஞ்சனா குறை சொல்வாள் ஆசிரியரிடம். ஆனால கல்பனாவோ மிகவும் பாவம். அவள் ஓர் ஏழை அவளது அப்பா கல்பனா கண்விழிக்கும் முன் ஒரு நொடிப் பொழு தில் உலகத்தை விட்டு மறைந்து விட் டார். கல்பனாவை அவளது தாயால் தையல் வேலை செய்து படிக்க வைக் கிறார். கல்பனா ஒழுக்கத்திலும் நல்ல அறிவிலும் சிறந்தவள்.

ஒரு நாள் மாணவியர் அனைவ ரும் விளையாட்டுப் பாடவேளைக்காக மைதானத்தில் நுழைந்தனர். அவ் வேளை கல்பனாவிற்கு அதிக காய்ச்சல் காரணமாக ஆசிரியரின் அனுமதியுடன் வகுப்பறையில் இருந்தாள். சற்றுநேரத் தில் மைதானத்தில் விளையாடிய களைப்பில் காஞ்சனா வகுப்றையினுள் நீர் அருந்துவதற்காக நுழைந்தாள். அவ் வேளை கல்பனா உறங்கிக் கொண் டிருப்பதைப் பார்த்துவிட்டு கங்காவின் அப்பா வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பேனாவை எடுத்து அலுமாரியினுள் வைத்து விட்டு வெளியே ஓடிவிட்டாள்.

பாடவேளை முடிவடைந்ததும் அனைவரும் வகுப்றையினுள் கணித பாடத்திற்காகப் பிரவேசித்தனர். ஆசிரியர் வகுப்பறையினுள் நுழைந்து கற்பிக்க ஆரம்பித்த வேளை கங்கா தனது பேனா வைக் காணவில்லை என ஆசிரியரிடம் முறையிட்டாள். ஆசிரியர் அனைவரது புத்தகப் பைகளையும் பார்வையிட்டார். பேனா இல்லை. காஞ்னா ஆசிரியரிடம் நான் நீர் அருந்த வரும் போது கல்பனா இங்கு படுத்திருந்தாள். ஒருவேளை அவள் எடுத்திருக்கலாம் எனக் கூறி னாள். கல்பனா உடனே எழுந்து மிஸ் நான் ஓர் ஏழை, நான் ஒரு போதும் களவு செய்வதில்லை எனக் கூறினாள்.

ஆசிரியர் கல்பனாவை விசாரித் தார். கல்பனாவோ உறுதியாக தான் கூறிய வார்த்தைகளையே மீண்டும் கூறி னாள். ஆசிரியர் திகைத்தார். கல்பனா ஒழுக்கத்தின் மீது கொண்டிருந்த நம் பிக்கை அவளது நேர்மையான வார்த்தை என்பனவற்றை யெல்லாம் பார்த்த ஆசி ரியர் ஆச்சரியப்பட்டார். அவளை நம்பினார்.

மறுநாள் வகுப்புத்தலைவர் அலு மாரியை திறக்கும்போது அங்கு கங்கா

வின் பேனா இருப்பதை அவதானித்து ஆசிரியரிடம் ஒப்படைத்தாள். உண்மை வெளிப்பட்டது. காஞ்சனாவை ஆசிரியர் மிகவும் கோபமாகக் கண்டித்தார். கல்பனா விடம் உயிரை விட மேலாக ஒழுக்கம் தான் பெரிது என்ற உனது உணர்வை நான் மதிக்கிறேன் என்று கூறி அவளைப் பாராட்டினார். அத்துடன் அவளது அம் மாவையும் அழைத்து உமது பிள்ளை யின் படிப்புச் செலவை நான் பொறுப் பேற்கிறேன் என்று கூறினார்.

''எச்சந்தர்ப்பத்திலும் எச் சூழ் நிலையிலும் ஒழுக்கத்தை விட்டு உயிர் பெரிது என வாழ்தல் அழகல்ல, உலக செல்வங்களில் மகத்தானது ஒழுக்கம் ஒன்றே''

ஏஞ்சல் மயூறிக்கா மரியராசா
தரம் 11

சாரதா

ஒரு அழகிய கிராமம் ஒரு சிறு குடிசை அதனுள் சுருண்டு படுத்து இருக் கிறான் மாடசாமி. ஒரு படிக்காத பாமரன் மிகவும் கோபமானவன். அவனுக்கு ஒரு அழகிய மகள் சாரதா. அவள் மிகவும் ஒழுக்கமாகவும் பண்பாகவும் சாந்தமாக வும் இருப்பாள். மாடசாமி தனது மகளை கல்வி கற்பதற்கு அனுப்புவதில்லை. ஆனால் சாரதாவிற்கு படிப்பதற்கு ஆசை படித்து வேலைக்குச் சென்று அப்பாவை நன்றாக வைத்திருக்க வேண்டுமென்று ஆசையாயிருந்தது.

சாரதா நன்றாகப் படிபபாள் ஆனால தாய் இறந்தவுடன் அவளுடைய படிப்பு பாதியில் நிறுத்தப்பட்டது. மாடசாமி உழைக்கும் பணம் அவரது குடிப்பழக் கத்திற்கே போதுமானதாக இருந்தது. சாரதா தன் தலைவிதி இவ்வளவுதான் என்று கவலைப்பட்டாள். அவளது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. திடீ ரென அவளது வாழ்வில் ஒரு திருப்பம்.

கண்ணப்பன் மாஸ்டர், அவர் சார தாவிற்கு கற்பித்தவர். அவர் ஒரு நாள் வீதியில் சாரதாவை கண்டு வியப்படைந தார். அவள் அவரிடம் தனது முழுக் கஷ்டத்தையும் எடுத்துரைத்தாள். அவர் அவளுக்கு படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தி அவளைப் படிக்க வைத்தார். சாரதாவும் நன்றாகப் படித்தாள். கிரா மத்தில் முதலிடம் பெற்று நகர பாட சாலை ஒன்றிற்கு உயர் கல்வி கற்பதற் கான வாய்ப்பு கிடைத்தது.

அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்து பல கனவுகளுடன் கல்லூரிக்கு செல்ல ஆயத்தமானாள். கல்லூரியில் அவள் கிராமத்தவள் என்பதால் அன்புடன் பழக ஒருவரும் இல்லை. அவளது வாழ்க்கை முறையால் நட்புடன் பழக ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் அவள் எதை யும் பொருட்படுத்தாமல் கல்வியில் முன் னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் கல்வியினைத் தொடர்ந்தாள் கல்வியில் உறுதியாய் இருந்தாள். காலம் கடந்தது. அவள் மிகவும் நன்றாகப் படித்து மருத்து வராக தன் ஊருக்குச் சென்றாள். அங்கே அவள் தந்தையின் உடல் நிலை மிகவும் மோசமாயிருந்தது. சிறிது நாட்களில் மாடசாமி இறந்து விட்டான். தான் வைத்தியராக இருந்தும் தனது

The Primary School Prefects' Installation - 26.01.2009

The procession of prefects

The prefects taking their oath

The Head Girl, Hishonia Muthukumar, gets her badge from the principal

Prefects' Installation of the Primary School - 21.01.2010

The prefects' procession

Standing for the Prayer song

The Head Girl,
Wasana Madhubhashini Wimal,
takes her oath

தந்தையைக் காப்பாற்ற முடியவில்லையே என அவள் மிகவும் வருந்தினாள்.

அக்கணமே அவள் முடிவெடுத்தாள். தன் தந்தை போல் எவரும் வாழக் கூடாது. அப்படி வாழ்பவர்களை நல் வழிப்படுத்த வேண்டும். நல்ல வண்ணம் வாழ வைக்க வேண்டும் இவ் முடிவுடன் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தாள் அவள்.

ஆன் கீர்த்தனா
டன்சன்
தரம் 11

அநாதைகளுக்கு உதவுவதே அருட்பணி

பச்சைப்பசேலென படாந்திருக்கும் தாவரங்கள், சில்லென்று அடிக்கும் தென்றல் காற்று, சத்தத்தோடுரசனையை ஊட்டும் அருவிகள், சின்னச்சின்னப் பறவைகள், சிலிர்க்க வைக்கும் காட்சிகள் என இயற்கையழகை தன்னகத்தே கொண்டது பசும்பொன் எனும் கிராமம். கிராமத்தின் நடுவில் நின்று பார்க்கும் பொழுது ஊரெல்லாம் கோபுரமாகத் தெரியும், காரணம்? கிராமத்தைச் சுற்றிலும் ஆலயங்கள்.

அங்கு வாழும் மக்கள் கிராமத்தைப் போன்று செழிப்பாக இல்லாவிடினும் ஓரளவு வசதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனாலும் செல்வச் செழிப்பு ஓங்க இரு தனவந்தர்கள் ஊரின் பெயரிற்கேற்ப வாழ்கின்றார்கள்.

சிவராஜா தனது மகளின் பிறந்த தினத்திற்கென அம்மன் கோவிலைத் தரிசிக்க தனது குடும்பத்துடன் செல்கிறார். கடவுள் பக்தி சற்றே உள்ளவனாயினும் கல் நெஞ்சம் படைத்தவர். அவர் மகளின் நச்சரிப்பினாலேயே கோவிலுக்கும் வந்தார். ஆலய தரிசனம் முடித்துக் கொண்டு கோவிலிலிருந்து புறப்படும் வேளையில் ஒரு சிறுவனின் அழுகுரல் அருகில் ஒலித்தது. சிவராஜாவின் மகள் சுற்றிலும் முற்றிலும் பார்த்தாள். கோவில் மரத்தடியில் ஓர் சிறுவன் வாடியமுகத்துடன் கதறிக் கொண்டிருந்தான். ஓடி வந்த சிவராஜாவின் மகள் அச்சிறுவனை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். ஏன் எதற்காக அழுகிறாய் தம்பி என்று மென்மையான குரலில் கருணையுடன் அன்பும் நிரம்பக் கேட்டாள். அவள் கேட்டதும் அச்சிறுவனின் அழுகையொலி நின்று அக்கா... அக்கா... என ஏதோ சொல்ல எடுத்தான். அதற்குள் அவளின் தந்தை சிவராஜா வந்து ''ஏன் வீணாக இதில் பேசிக் கொண்டிருக்கிறாய்?. வா போகலாம்'' என அழைத்தார். ''சற்று பொறுங்கள் அப்பா இந்தத் தம்பி பாவம் எதனையோ நினைத்து அழுகிறது என்ன வென்று கேட்போம்" என்றாள். ''காசு ஏதாவது ஏதிர்பார்க்குது போல" என்று பத்து ரூபாய் காசை எடுத்து அவன் இருந்த இடத்தில் போட்டுவிட்டு மகளையும், மனைவியையும் கூட்டிக்கொண்டு சென்று விட்டார்.

அடக்கியிருந்த சிறுவனின் அழுகுரல் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. வீட்டுக்கு வந்த சிவராஜா வியாபார விடயமாக வெளியே கிளம்பினார். சிவராஜாவின் மகளான தனுஷா முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டிருந்தாள். சிவராஜாவும் மகளுக்கு கொஞ்ச பணத்தைக் கொடுத்து இனிப்புகள் வாங்கி உண்ணுமாறு கூறிச் சென்று விட்டார்.

தந்தை கொடுத்த பணத்தை கீழே போட்டுவிட்டு தாயாரிடம் ஓடினாள். ''அம்மா அம்மா உங்கள் ஒருவருக்கும் என்னிலும் பாசமில்லை, பிறரிலும் பாச மில்லை" என்றாள். என்னம்மா? என்ன நடந்தது? என்று தாய் கேட்க ''கோவி லில் நின்ற அந்தச் சிறுவனிடம் அவன் நிலைமைக்கான காரணத்தை கேட்கவே விடவில்லை. நீங்கள் என்னில் பாசமென் றால் என்னை அங்கே போக விடுங்கள்" என்றாள். அவள் பேச்சிற்கு மறு பேச்சு பேசமுடியாமல் ''சரி நீ அப்பா வரமுன் போய் சீக்கிரம் வந்திடம்மா" என்றாள். சரியெனக் கூறி அம்மா செய்த இனிப்புக் களை சிறிதளவை எடுத்து, அம் மாவிற் கும் முத்தம் கொடுத்து புயல் போன்று விரைந்தாள் ஆலயத்தை நோக்கி.

அந்த மரத்தடியில் பார்த்தாள், அச்சிறுவன் அவ்விடத்திலேயே படுத்து உறங்கிவிட்டான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது அவளுக்கு. அச் சிறுவனை எழுப்பி அவள் கொண்டுவந்த இனிப்புப் பண்டங்களை அவனுக்கு உண்ணக் கொடுத்தாள். பின்பு சிறுவனி டம் அழுததற்கான காரணத்தினைக் கேட்கத் தொடங்கினாள்.

அவன் சொன்னதைக் கேட்டதும் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவள் எதுவும் பேசாமல் வீட்டுக்கு வந்தாள். வீடுவந்த அவளிடம் தாயார் என்ன தனு? ஏன் இப்படி இருக்கிறாய்? எனக்கேட்டாள். அவளும் அழுது கொண்டே அயலூரில் நடந்த ஒரு சின்னப் பிரச்சி னையால் அச்சிறுவன் தந்தையின் மர ணத்தை நேரில் கண்டான். தொடர்ந்தும் அங்கு வாழமுடியாது தாயாருடன் இங்கு வந்துள்ளான். கணவனையும் தனைய னையும் இழந்த அவனது தாயார் புத்தி சுவாதீனமற்று இருக்கிறார். தற்பொழுது அவர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடுப்பு, உறைவிடம் எதுவுமின்றித் தவிக கின்றனர். தாயாரை வைத்தியசாலை யில் அனுமதித்து விட்டு என்ன செய்வ தென்று தெரியாமல் கோவிலில் இருக் கிறான். பாவம் அம்மா அந்தத் தம்பி கூலிவேலை செய்து கூட தாயாரை காப் பாற்ற முடியாத வயது. அவன் நிலையை யோசித்துப் பாருங்கள், அவனுக்கு அப்பாவிடம் சொல்லி உதவி செய்யுங் கள் என்று அழுதாள். இதனைக் கேட்ட தனுவின் தாயும் கண்கலங்கி நின்றாள். ''அழாதேயம்மா அப்பா வந்ததும் அவரிடம் இதனைப்பற்றி சொல்லி ஏதாவது உதவிசெய்யலாம்" என்றாள்.

அவள் அவ்வாறு கூறும் வேளை யில் தந்தையும் வீடுவந்து சேர்ந்தார். அவர் வந்ததும் அவருக்கு உணவு பரிமாறிய. பின்பு தனுஷாவின் தாயார் சிறுவன் பற்றிய விடயத்தை மெல்ல எடுத்துச் சொான்னாள். ''உனக்கேன் யாரையும் பற்றிக் கவலை. நானே ஏலக் காய் வியாபாரம் தொடங்க பணம் பத் தாது எண்டிருக்கிறேன், இதில் அடுத்த வனுக்கு அள்ளிக் கொடுத்து என்னை ஆண்டியாகச் சொல்லுரியே" எனத்திட்டி னார் தந்தை. இதனைக் கேட்ட தனுஷா கோபம் தாங்காது உள்ளே சென்று விட்டாள்.

சூரியனும் மெல்ல மெல்ல தனது கதிர்களை மடக்கி மறைந்து கொண்டிருக்கிறான். அழுது அழுது தூங்கிவிட்ட தனுஷா திடுக்கிட்டவளாய் திடீரென விழித்தாள். ஐயையோ! அந்தச் சிறுவன் இப்பொழுது என்ன செய் வானோ? எங்கேயிருப்பானோ? என்று மனம் புலம்பினாள்.

தனுஷா அக்கா நிச்சயம் வருவா, வருவா என இரவெல்லாம் எதிர்பார்த்த

அச்சிறுவனுக்கு ஏமாற்றமே மிகுதியாய் இருந்தது. அழுதழுது அவன் தெம்பையே இழந்து விட்டான். பொழுதும் புலர்ந்தது. தூரத்தில் யாரோ பாவாடை சட்டையுடன் வருவது போலத் தெரிந்தது. தனுஷா அக்காவாகத்தான் இருக்குமென ஓடினான். அங்கும் அவனுக்கு ஏமாற்றமே. வந்தது வேறுயாரோ. அவன் முகம் மாறியது. அதிலேயே நின்றுவிட்டான். வந்த அந்தப் பெண்ணுக்கும் அச்சிறுவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. என்னதம்பி? ஏன் ஓடிவந்தனி? யார் வேண்டும் என அடுக்கடுக்காகப் பல கேள்விகளை எழுப்பினாள். அவனும் நடந்ததை ஒன்றும்விடாமல் கூறினான். அவளும் சற்று நேரம் ஏதும் பேசாமல் நின்றாள். பின்பு ''தம்பி இந்த ஊரில் ஏழைகளுக்கு வாரிவழங்கும் தனவந்தர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் உன் பிரச்சினையைச் சொல் உனக்கு அவர் உதவிசெய்வார்''. அவர் பெயர் தனராஜா அவரை உடனடியாகச் சென்று பார்'' என்றாள். அவள் சொன்னதும் மின்னல் வேகமாய் அங்கு சென்றான். தனராஜாவையும் சந்தித்தான். அவரிடம் நடந்ததைக் கூறினான். அவரும் அவனுக்கு உதவி செய்கிறேன் என மனமுவந்து கூறி ''உனது தாயை அழைத்துவா, வேறு வைத்தியம் செய்வோம்'' என்றார். அவர் தாயை அழைத்துவா'' எனக்கூறிய போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. தன்னைக் காணாவிடில் தாயார் எங்காவது சென்றுவிடுவார் என்று தனராஜாவிடமிருந்து விடை பெற்றவனாய் விரைந்து வைத்தியசாலையை நோக்கி ஓடினான். அங்கு எல்லா இடமும் தேடினான், தாயார் இல்லை. அங்குவந்த தாதியிடம் தனது தாயைப் பற்றிக் கேட்டான். அவளும் தானும் பார்க்கவில்லை என்று கூறிச் சென்றுவிட்டாள். கவலை தோய்ந்த முகத்துடன் வீதியை நோக்கி நடந்தான். அங்கேயொரு கூட்டம் நின்றது அவன் கண்களுக்குத் தெரிந்தது. அவ்விடம் நோக்கி நகர்ந்தான். கூட்டத்தை விலக்கிப் பார்த்தான் பார்த்தவன் ஓவெனக் கதறியழுதான். காரணம் இவனைத் தாய் தேடிச் சென்றிருப்பார் போலும் செல்லும் வழியில் விபத்துக்குள்ளாகி மரணமடைந்துவிட்டார்.

என்னகொடுமை! தாயைக்காப் பாற்ற வழிகிடைத்தும் பலனில்லை. பாடசாலைக்கென அவ்வழியே வந்த தனுஷாவும் அக்காட்சியைக் கண்டாள். காரிலிருந்து கீழே இறங்கி ஓடிவந்தாள். அவளுடன் அவள் தந்தையும் வந்தார். வந்த தந்தையார் வா தனுஷா பள்ளிக் கூடத்திற்கு நேரம் போயிட்டுது என்று அவள் கையைப் பிடித்தார். ''விடுங் கப்பா என்று கையை உதறியவள் நீங்களெல்லாம் ஒரு மனுஷனா; ஆபத்தில் இருக்கிற சிறுவனுக்கு உதவுங்க என்று கேட்டபோது மாட்டேனென்று மறுத்தீர்கள். உங்களுக்கு யார் எப்படிப் போனாலும் கவலை இல்லை. உங்களைப் பற்றித் தான் கவலை. இவ்வளவு பணத்தையும் உழைச்சு என்னசெய்யப் போறீங்கள். உங்களிடமிருக்கும் யாருக்கும் உதவாத பணம் எனக்கும் தேவையில்லை. நாங்கள் சாகும் போது கடைசியில் எமக்கு மிஞ்சுவது ஆறடி நிலம் தான். உங்களிடம் இருக்கிற பணத்தைக் கொண்டு வாழமுடியாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவிசெய்யுங்க. இல்லையென்றால் உங்கட பாழாப்போன பணத்தை மூட்டை கட்டி குப்பையில் போடுங்க'' இனிமேல் மனிதத் தன்மை இல்லாத அந்த வீட்ட நான் வரமாட்டேன். அநாதைக் குழந்தைகளுக்கு உதவிசெய்ய மறுக்கிற நீங்கள் உங்கடபிள்ளையைப் பற்றியும் கவலைப் படவேண்டாம். நானும் அநாதைப்பிள்ளைகளோடேயே போகிறேன்'';

நீங்கள் நேற்று அந்தப்பையனுக்கு உதவி செய்ய சம்மதித்திருந்தால் அவன் தனது தாயை இழந்திருக்க மாட்டான். அநாதையாகியிருந்திருக்கமாட்டான். அடுக்கடுக்காகமாடி கட்டினால் மகிழ்ச்சி வருவதில்லை. ஊரிலுள்ள அநாதைப் பிள்ளைகளுக்கு உதவி செய்யுங்கோ அதுதான் பெரிய மகிழ்ச்சி" என்று கூறி அழுதாள்.

ஊர்மத்தியில் தந்தையைப் பேசினாலும், அவள் பேசியதில் நியாயம் இருப்பதை உணர்ந்தார் சிவராஜா. சிவ ராஜாவின் மனைவி தந்தையைப் பேசி யதால் மகளிடம் கோபம் கொண்டு கையை அடிக்க ஓங்கினாள். மனைவி யின் கையை மறித்த சிவராஜா அவளை அடிக்காதே அவள் கூறியதில் எள்ளள வேனும் பொய்யில்லை. எம்மிடம் இருப் பதை பிறருக்குக் கொடுத்துதவ வேண்டும். அநாதைப் பிள்ளைகளுக்கு உதவி செய்து அவர்களை வாழவைக்க வேண்டும். எனக் கூறி தன்னால் அநாதையான அச் சிறு வனைத் தூக்கி தனது காரில் ஏற்றி தாயாரை அடக்கம் செய்யவும் ஏற்பாடு செய்து விட்டு விரைகிறார் விடியலை நோக்கி. ஆம் அநாதைகளுக்கு உதவு வதே அருட்பணியென உணர்ந்த வராய்ச் செல்கிறார்.

பிரசாளினி கனகராஜா
2011 வர்த்தகம்

சிறகிழந்த பறவைகளுக்கு கை கொடுப்போம்

அழகிய அதிகாலைப்பொழுது புலர்ந்தும் புலராத அந்த மௌன வேளையிலே நிலாவின் வெள்ளையில் உறங்கிக் கிடக்கும் உலகம், உறவுக ளைத் தேடி அழுகின்ற குழந்தைகளா கக் கிடக்கும் இரவுப் பனியில் நனைந்து விட்ட பச்சைமரங்கள், அநாதரவற்று உறவுக்காய் ஏங்கிக்கிடக்கும் நீண்ட சாலைகள், இரவுப் பனியில் நனைந்துவிட்ட பச்சைப் புல்வெளிகள், அந்த மௌனம் தரும் நிசப்தமான வேளையிலே காலைக் கதிரவன் மெல்ல மெல்லத் தலை காட் டத் தொடங்கவே அவன் கதிர்கள்பட்டுத் தெறித்த யன்னலூடாக வந்த ஒளிச்சம் கண்டு விழித்துக்கொண்டாள் அவள்.

ஆம் அவள் வேறுயாருமில்லை. சந்தியாதான். அவளிற்கு அன்றைய காலை சந்தோஷத்தை தந்திருந்தது. முதல் எப்போதுமே இருந்திராத திருப்தி யில் அவள் திக்குமுக்காடிக் கொண் டிருந்தாள். தன்னோடு போட்டி போட்ட தகுதியுடைய பல மாணவிகளின் போட் டிக்கும் பொறாமைக்கும் மத்தியில் தான் பாடசாலை சேவைக் கழகத் தலைவியா கத் தெரிவாகியமையாலும், அத்தோடு கண்டியில் நடத்தப்படும் தேசிய சேவை சம்பந்தமான மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒரே ஒரு யாழ்மாவட்டப் பிரதிநிதி என நேற்றைய கூட்டத்தில் தன்னை பாடசாலை அதிபர் அறிவித் ததுமே அவளிற்கு இவ்வளவு சந் தோஷத்தை தந்திருந்தது. வாழ்க்கை யில் இதுவரை எதிலுமே வெற்றி பெறாது பின்நோக்கிச் சென்ற அவளுக்கு கிடைத்த இந்த அங்கீகாரம் தான் அவளை மகிழ்ச்சியில் திளைக்க வைத்துள்ளது.

The Primary School Sportsmeet - 14.02.2009

Arrival of the Chief Guest
Mr. J. Amalaseelan,
Rtd. Vice Principal,
St. John's College, Jaffna

The Chief Guest's Address

The Chief Guest unfurling the college flag

The ball passing event

Prize Distribution
Mrs. Mary Josephine Amalaseelan

The staff getting ready for the lime and spoon race

The Primary School Sportsmeet - 03.03.2010

Arrival of the Chief Guest, Mr. C. Kuharajan,
Branch Executive officer,
Sri Lanka Red Cross Society, Jaffna.

The Junior Band
ready for the
Marchpast

The Chief Guest's Address

Prize Distribution
Mrs. Usha Kuharajan

The ball passing event

The Games
Captain
carrying
the Olympic
Torch

தனக்கு இந்த அங்கீகாரத்தை தந்தது எது என்று அவள் யோசிக்கின் றாள். ஆம், சிறகிழந்த பறவைகளாக பாடசாலைக்கு வந்து சேர்ந்த வன்னி மாணவிகள் தான் அவள் கண்முன் வந்தனர். அச்சிறகிழந்த பறவைகளால் தான் தனக்கு இந்த அங்கீகாரம் கிடைத் தது என உணருகின்றாள் அவள். அவ ளால் அவர்களை ஒருகணம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

ஆம் அவர்கள் அன்று தான் புதிய பாடசாலைக்கு வந்திருந்தனர். வன்னி யில் நடந்த யுத்தம் காரணமாக ஒவ்வொரு வருமே பாதிக்கப்பட்டிருந்தனர். கடைசிக் கட்ட யுத்தத்தின்போது புதுமாத்தளன் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் வழியிலே கையோடு வந்த பெற்றோரை இழந்து பரிதவித்து வந்தபோது முகாம்களில் அடைக்கப்பட்டனர். பின்னர் இப்போது தான் சிறகை இழந்த அவர்களுக்கு விடியல் தொடங்கியிருக்கின்றது. ஆம் அவர்கள் ஒரு பொது நிறுவனம் ஒன்றின் மூலம் சந்தியாவின் பாடசாலையிலே இன்றுதான் இணைக்கப்பட்டனர்.

முதல்நாள் வகுப்பு அல்லோல ப்பட்டது.

''புதுப் பிள்ளைகள் வந்திருக்கினம், எங்கட வகுப்புக்கு''

''யாரு''

''வன்னிப் பிள்ளையளாம். அம்மா அப்பா இல்லையாம்''

''ஐயோ பாவம்''

எல்லோருமே வந்தவர்களைப் பற்றிக் கதைத்தார்கள். அவர்களிடம் யுத்தகாலத்தில் நடந்த கொடுமைகள் பற்றிப் புதினம் கேட்டார்கள். பெற்றோரை இழந்த கதையைச் சொன்னபோது பாவப்பட்டார்கள்.

''அவவின் அம்மா, அவ முன்னாலேயே குண்டடிபட்டுச் செத்தவாவாம்''

''இவவின்ர அண்ணாவும் அப்படித்தான்''

''எல்லோருமே சரியான பாவம்''

எல்லோரும் பாவப்பட்டார்களே ஒழிய, அவர்களுக்கு உதவுவதற்கு முன்வரவில்லை. அவர்கள் வகுப்புத் தலைவி, அனைத்து ஆசிரியர்களாலும் முன்மாதிரியாகக் கொள்ளப்படும், அனைத்து வேலைகளையும் திறம்படச் செய்து முடிக்கும் மாதவி கூட அந்த சிறகிழந்தவர்களுக்கு கைகொடுக்க முன்வரவில்லை. அந்த மாணவர்களின் அரை வருடப் படிப்பு யுத்தத்தினால் சீரழிந்தபடியால் அவர்களிற்கு படிக்கும் பாடத்தை விளங்குவதில் சிரமம் இருந் தது. அவர்களிடம் உரிய குறிப்புக்கள் கூட இருக்கவில்லை. இன்னும ஆறு மாதத்திற்குள் கா/பொ/தஉயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கக் கூடிய வல்ல மையை அவர்கள் அடியோடு இழந்துவிட டிருந்தனர். இந் நிலையில் அவர்களிற்கு மற்ற மாணவரின் கொப்பிகள் தேவைப் பட்டன. ஆனால் அவர்கள் அதை வாய் திறந்து கேட்கவில்லை.

ஆனால் இதை மற்ற மாணவர் கள் உணர்ந்து உதவவில்லை. சந்தியா தான் இதை உணர்ந்து அவர்களுக்கு தன் கொப்பிகளைக் கொடுத்தாள். அவர் களின் தேவைகள் பல இன்னும் பூர்த்தி செய்யப்படாமலிருந்தது. வகுப்பிலே ஓய்வுப் பாடங்களில் வகுப்புத்தலைவி உட்பட எல்லோருமே கதைப்பதில் ஆர்வம் காட்டிய போதெல்லாம் சந்தியா அவர்களோடு சேர்ந்திருந்து அவர்க ளிற்கு விளங்காத பாடங்களை விளங்கப் படுத்த முயன்றாள். பதிலுக்கு சில மாணவர்கள் அந்தப் பிள்ளைகளிடம் பழைய கதைகளைக் கூறும்படி கேட்டு வந்து அவர்கள் மனதை ரணகளப்

படுத்திய போதெல்லாம் சந்தியா அவர்களை எதிர்த்தாள்.

''அவர்களோடு இப்படிக்கதைக்க வேண்டாம்''

''அப்ப நீர் மட்டும்தான் கதைக்கலாமோ.''

''நீங்கள் வேணுமென்றால் அவர்களுக்கு பாடங்கள் விளங்கப்படுத்துங்கோ''

அதற்கு பின் அவர்கள் அங்கே நிற்கவில்லை. வகுப்புத்தலைவி மாதவி உட்பட சந்தியா தவிர்ந்த அனைவரும் வன்னி மாணவர்கள் விடயத்தில் கவனம் செலுத்தவில்லை. மாதவிதான் இதுவரை பல பதவிகளை வகித்துவந்ததோடு அவர்கள் பாடசாலையில் பலரும் போட்டி போடும் சேவைக் கழகத்து தலைவிப் பதவியும் அவளிற்கே வரும் என அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். மாதவியும் அப்பதவிக்குத் தேவையான அனைத்து வேலைகளையும் செய்யும் திறமை பெற்றிருந்தாள். ஆசிரியர்கள் எந்த நேரத்திலும் எதைச் சொன்னாலும் செய்யும் திறன் பெற்றிருந்த மாதவிக்கு ஏதோ ஒருவகையில் திமிர் வந்திருந்தது.

இதனால் அவள் அந்த வன்னி மாணவர்களிற்கு உதவ விரும்பவில்லை. அத்துடன் தன்னோடு தனக்குச் சமனான பிள்ளைகளையே சேர்த்துக்கொண்டாள். அவர்கள் அநாதைகள். அவர்களிற்கு உதவ வேண்டும் என அவள் எண்ணவில்லை. ஆனால் அவளிடம் கடவுள் பக்தியிருந்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது கோயிலுக்குச் செல்வாள். இத்தனை பண்பிருந்தும் அவள் அந்த வன்னி மாணவர்களை ஒதுக்கி வைத்தாள். அத்தோடு அவர்களோடு கூட்டுச் சேர்ந்த சந்தியாவை மாதவி உட்பட சில மாணவர்கள் ஒதுக்கி வைத்தனர்.

''அவ ஏன் இப்படி அதுகளோடு பழகிறா''

''எல்லாம் நல்ல நடிப்பு''

''ஓம் தான் தான் நல்லவா என்று நடிக்கிறா''

இப்படி அவர்கள் கதைத்துக் கொண்டனர். இதை சில காலமாக அவர்களது வகுப்பாசிரியர் கவனித்ததை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. சந்தியா நடிப்பிற்காக அன்றி தன் உள் மனதின் ஓர் உந்துதலாலேயே அந்த மாணவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தாள். சந்தியா ஒருநாளும் அவர்களது உணர்ச்சிகளைத் தூண்டி, சோகத்தில் ஆழ்த்தவில்லை. மாறாக அவர்களை ஆறுதல் படுத்தும் நண்பியாகவே இருந்தாள். இதை வகுப்பாசிரியர் நன்றாகக் கவனித்தார். விளைவு விடயம் அதிபருக்கும் எட்டி சந்தியாவை உயரவைத்துவிட்டது.

ஆம் அன்று நடந்த கூட்டத்தில் எல்லோரது எதிர்பார்ப்பிற்கும் மாறாக அதிபர், பாடசாலை சேவைக்கழகத் தலைவியாக சந்தியாவை தேர்ந்தெடுத்ததாக அறிவித்த போது எல்லோருமே வாயைப் பிளந்து நின்றனர். அதிபர் பேசினார்.

''பல மாணவர்கள் வேறு மாதிரித்தான் எண்ணினார்கள் ஆனால். அவர்களது விருப்பத்திற்கு மாறாக சந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணம், அவள் வன்னி மாணவர்கள் மீது காட்டிய கரிசனைதான். அநாதைகளுக்கு உதவுவதையே இந்த சேவைக் கழகம் மிகப்பெரிய அருட்பணியாக எண்ணுகின்றது.

அவர் பேசிமுடித்த போது மாணவர் கரகோஷம் வானைப் பிளந்தது. ஆம் மாணவர்களும் சந்தியாவை தலைவியாக அங்கிகரித்துவிட்டனர். அதன்பின் சந்தியா பேசிய போது

ஒரேயொரு வார்த்தை கூறினாள். ''சிறகிழந்த பறவைகளுக்கு கை கொடுப்போம்.''

கரகோஷம் மீண்டும் வானைப் பிளந்தது ஆம் சந்தியாவால் சந்தோஷத்தை தாங்க முடியவில்லை. அந்த வன்னி மாணவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறாள். தனக்கு கிடைத்த இந்த அங்கீகாரம் மூலம் இன்னும் பல கைகள் சிறகிழந்த பறவைகளுக்கு கைகொடுக்க முன்வரும் என்று எண்ணி அவள் மேலும் சந்தோஷப் பட்டுக் கொண்டாள்.

கஜானனி ஏகானந்தசிவம்
2011 உயர்தரம்

வசந்தத்தின் வாசல்

அங்காடித் தெருவெங்கும், வாகன நெரிசலினால் அவதிப்பட்ட புகை மண்டலங்கள் வானளாவி பஞ்சாய் பறந்து கொண்டிருந்தன. துரிதமாய் வழிந்தோடிக்கொண்டிருந்த சாக்கடையின் நீர், மூக்கை அரித்தாற் போலிருந்தது. செங்கைகளைப் பரப்பி நின்ற அதிகாலைச் சூரியன் சற்று ஓய்வெடுத்துக் கொள்ள, நிழல்களைப் பரப்பி விட்டான். சாலையோரமாய் உயிர்ப்புடன் செயல்பட்டுக் கொண்டிருந்த மரங்களும், மனிதர்களும் தான் இதற்கு சான்று. தெருவின் முனையில், பூச்சுக்கள் கொண்டு வரையப்பட்ட 'அரச முதியோர் இல்லம்' எனும் எழுத்துவரிகள் பலகையில் விரிக்கப்பட்டு இரு தூண்களின் நடுவே தூக்கிவிடப்பட்டிருந்தது. சுவர்களின் அரண்களாய். வளாகத்தின் நடுவே தலையைத் தாழ்த்தி நின்ற ரோஜா மலர்களைக் கண்ணுற்று நோக்கி, தனது சாய்வு நாற்காலியிலிருந்து மெதுவாய் எழுந்து அவ்விடம் நோக்கி விரைந்தாள் தெரேசம்மாள். 'தெரேசா' பெயரிலேயே ஒரு கனிவு. அவள் குணமும் அப்படியே. நீர் நிறைந்து கிடந்த பெருங்குவளையை எடுத்துச் சென்று அவற்றிற்கு ஊற்றினாள். பூரித்துப் போனது மலர்கள் மட்டுமல்ல; அவள் மனமும் தான். இனம் புரியாத சிந்தனை அவளை ஆட்கொண்டது. தெரேசம்மாள் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

''தெரேசம்மாள், என்ன யோசனை?'' என்ற கேள்விக்கணை தொடுத்து அவள் தோளைப் பற்றியிருந்தது அந்த உருவம். அது அவள் கணவன் அந்தோனிப் பிள்ளையினுடையது. ''இல்லையப்பா, நம்மபுள்ள ஜெரியிட ஞாபகம் வந்திருச்சு. இந்தப் பூக்களைப் போலவே தான் அவன் சிரிப்பும்... அவன் எப்பிடி இருக்கானோ?...'' என்றவளது குரல் அடைத்து, கண்கள் குளமாகிப் போயின. ''அவன் தான் நம்மை மறந்துட்டானே. கட்டின மனுஷியின் பேச்சைக் கேட்டு நம்மை அநாதையாக்கிட்டானே. இனி அவனைப் பற்றி என்ன நினைக்கிறது. என்றவரது வார்த்தைகள் அதை ஆமோதித்தாலும், மனம் அதை ஏற்க மறுத்தது. அதனை வெளிக்காட்டாது ''வா தெரேசா. சேர்ச்சுக்கு காலாற நடந்து போயிட்டு வருவம், மனசுக்கும் நிம்மதியா இருக்கும்'' என்றவாறே அவளை அணைத்து, தோளைப் பற்றியவாறே தன் கால்களைக் கொண்டு சென்றான் அந்தோனிப்பிள்ளை.

உயர்ந்த நின்ற கம்பத்தில் தன்

கரங்களை அகலவிரித்து, முள்முடி சிலுவை தாங்கி நின்றார் இயேசு நாதர். அதனைக் கண்டு சிலுவைபோட்டுக் கொண்டனர் இருவரும். அநேகர் அங்கு சென்று மன்றாடியதற்காய் தன்னைத் தானே உருகவைத்துக் கொண்டிருந்தன மெழுகுவர்த்திகள். முழந்தாளிட்டு கண் ணீர்த்துளிகளை அர்ச்சனைப் பூக்களாய் தெரேசம்மாள் செலுத்திக் கொண்டிருந் தாள். அவள் மனம் சற்று இளகிப் போயிருந தது. அதனைத் தக்கவைத்துக் கொண்டு திரும்பியவளின் பார்வைகள் ஓரிடத்தில் நிலைபெற்றுத் தரித்தன: அவள் விழிகள் சென்ற அந்தத் திசையில் தலைதாழ்த்தி நின்ற அந்த மனித உருவத்தை இறுக அணைத்துக் கொண்டாள். ''ஜெரி! வந்திட்டியாப்பா. அம்மாவ ஏன் இவ் வளவு காலமா பார்க்கவரல. உன்னை நினைக்காம இருக்க முடியலப்பா.'' என்று கூறிக்கொண்டே நீர்மல்கிய கண் ணோடு நின்றாள் அவள். ''தெரேசா. இவன் நம்மபுள்ள ஜெரியில்லம்மா'' என அவளது உணர்ச்சிகளுக்கு முற்றுகை இட்டார் அவர். அவரது விழிகள் திரும்பி ''யாரப்பா நீ? எனக் கேட்டாற் போலி ருந்தது. நின்றிருந்தவன் கண்களும் அருவியை வழிந்தோடச் செய்தன. அவன விழிகள் மட்டுமல்ல மொழிகளும் ஊமையாகிப் போயிருந்தன.

அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, ''ஐயா! என்னோட பேரு ஜன கன். என்னோட சொந்த ஊரு பரந்தன். அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கை, பாட்டி, தாத்தா, மாமா, சித்தப்பா, சித்தியென்று பெரிய குடும்பம். ஊரிலேயே நல்ல பேருள்ள குடும்பம் தான் எங்களோடது. நான் யாழ்ப்பாணத் துல கம்பஸ்ல படிச்சுக்கொண்டு இருந் தன். வழக்கம் போல என்னைப் பார்க்க அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா எல்லா ரும் பஸ்ஸில வந்திருக்கிறார்கள். வந்த வழியில் மனித வெடிகுண்டு வெடிச்சதில பஸ்ஸில வந்தவங்களும் சுக்குநூறாய் போயிட்டாங்களாம். பள்ளிச்கூடத்திற்குப் போன தம்பியைப் பற்றியும் தங்கச்சி யைப் பற்றியும் எந்தவிதத் தகவலும் கிடைக்கல எனக்கென்று யாரும் இப்ப இல்ல. இன்டைக்கு நான் ஒரு அநா தையா திரியுறன். நான் மட்டும் ஏன் இன்னும் வாழணும்...''என்றவனது குரலின் தொனி சிறைப்பிடிக்கப்பட்டன.

''அப்படி சொல்லாதப்பா. நாங்க உனக்கு இருக்கிறம். நான் உன்னோட அம்மா'' என்றவளது உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்தவராய், ''ஆமாப்பா. நீதான் எங்களோட புள்ள. எங்க பையன் ஜெரி மாதிரியே இருக்கிறாய். ஆனால் உன்னுடைய பாசம் அவனையும் விஞ் சிட்டுது.'' என்றவராய் அவனை அணைத்து நின்றார் அந்தோனிப்பிள்ளை. காலங்கள் பல உருண்டோடின. ஜனகன் தெரேசம் மாளையும் அந்தோனிப்பிள்ளையையும் முதியோர் இல்லத்திலிருந்து அழைத்துக் கொண்டு வேறிடம் நோக்கிப் புறப்பட் டான். அவர்களது கால்கள் புதிய வசந்த வாசலை நோக்கி நடை போட்டன.

ஜெயப்பிரியா உதயகுமார்
2012 (கலை)

The Primary School Parents' Day & Prize Giving - 29.10.2010

Arrival of the Chief Guest
Mr. M. Kanagaratnam,
In-service Advisor
(Primary Education),
Jaffna Zone

The Primary
school supervisor,
Mrs. S. Jeyarajasingam,
welcoming the guests

The Chief Guest's Address

The Prize
Distribution
Mrs. Vasanthathevi
Kanagaratnam

அபிநயப்பாடல் 'வண்டி, வண்டி, புகைவண்டி ' – தரம் 1

Percussion Band
Grade 2

Drill Display
Grade 3

English Action song
'Teddy Bears' Picnic'
Grade 4

நாடகம்
'எங்கே போகிறோம்'

அபிநயப்பாடல் காட்சிகள்
ஆண்டு 3, 4, 5

உறவுகள் மேம்பட...

பிரவின் அந்த மெல்லிய சங்கீத மணி ஒலியிலேயே நித்திரை கலைந்து வெகு உற்சாகமாக எழுந்து விட்டான். காரணம் அவனது அன்புக்குரிய பெற் றோர் அவனைப் பார்ப்பதற்காக பாட சாலை விடுதிக்கு வருவதாக முதல் நாள் தொலைபேசியில் கூறியதாக பணிப்பெண் கூறியிருந்தாள்.

அவனது உற்சாகத்திற்கு அளவே இல்லாது வானத்தில் பறக்கும் ஒரு நிலையில் இருந்தான். அதிகாலை குளிரையும் கருத்தில் கொள்ளாது குளித்து விட்டு விடுதித் தோட்டத்திற்கு ஓடிச்சென்று புதிதாக பூத்துக் குலுங்கும் ரோஜாப் பூக்களை மெதுவாக பறித் தெடுத்துக் கொண்டு தனது ஆசை அம் மாவிற்காக ஒரு பூக்கொத்தும் ஒரு வாழ்த்துமடலையும் செய்து முடித்தான். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆகையால் காலைச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு எல்லாச் சிறுவர்களையும் விளையாட விட்டுவிடுவார்கள்.

அன்று அவனது நண்பனும் வெகு உற்சாகமாகக் காணப்பட்டான்.

''பிரவின் என்ன? இன்று உன் அம்மா வருவதால் என்னைக்கூடவா மறந்துவிடு வாய் எங்கே காட்டு உன் வாழ்த்து மடலை.''

''மிகவும் அழகாய் இருக்கா விஷால் என் அம்மாவிற்காக செய்தேன். இதைப் பார்த்தால் அம்மா ரொம்ப சந்தோஷப் படுவா இல்லையா!.''

''ம்.. ம்.. ரொம்ப சந்தோஷப்படுவா.''

''நீயும் ரொம்ப சந்தோஷமாக இருக்கி றியே. என்ன விஷயம்? உன் அம்மா வருவதாலா?''

''இல்லை.. என் அம்மாவும் அப்பாவும் இன்றுதான் வருகிறார்களாம். அவர்க ளோடு என் பாட்டியும் தாத்தாவும் கூட வருகினம். ரொம்ப சந்தோஷமாக இருக்கு. இன்று முழுவதும் நான் அவர்க ளோடு தான் இருப்பேன். அவர்களோடு காரில் பார்க்கிற்குப் போவேன், படம் பார்க்க போவேன், ஸ்டார் ஹொட்டலிற்கு போவேன், ஐஸ்கிறீம் குடிக்க கூட போவேன் தெரியுமா? உனக்கும் ஏதாவது வாங்கிக் கொண்டுவரவா பிரவின்.''

''வேண்டாம். நீ கன காலத்திற்கு பிறகு உன் அம்மா, அப்பா, பாட்டி, தாத்தாவை பார்க்கிறாய் அவர்களோடு நீ ரொம்ப சந்தோஷமாக இருந்துவிட்டுவா'' அதே நேரம் பணிப்பெண் வந்து விஷாலை அழைத்துச் சென்றாள்.

பிரவினிற்கு கொஞ்சம் கவலை யாக இருந்தது. பாட்டி, தாத்தா இருந்தி ருந்தால் இப்படிப் பாடசாலை விடுதியில் இருக்க விட்டிருப்பார்களா? பாட்டி, தாத்தா பிரவினிற்கு இருந்தார்கள். ஆனால் அவன அப்பாவிற்கு அவர்கள் தம் வீட்டில் இருப்பது பெரும் பாரமாக இருந்தது போலும், தினமும் அவர்களைச சொல் ஈட்டிகளால் குத்தி அவர்களது சோர்வுற்ற மனதை காயப்படுத்திக் கொண்டே இருந்தார். பாவம் அவர்கள் அப்பாவை விட்டால் வேறு கதி இல்லாது மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆனால் அம்மாதான் அவர்களிற்கு ஆதரவாக இருந்தாள். அம்மாவே தனது அம்மா அப் பாவோடு கதைத்து பாட்டி, தாத்தாவை தனது அம்மாவீட்டிற்கே

அழைத்து சென்று அங்கேயே அவர்கள் இருக்க வழியும் செய்தாள். ஆனால் பிரவினால் எல்லோரும் இருந்தும் அவர்களை பார்க்க முடியாத நிலை.

தனது பூக்கொத்துடனும் வாழ்த்து மடலுடனும் தோட்டத்திற்குச் சென்று அம் மாவின் வருகைக்காக காத்திருந்தான். அப்போது அவனிற்கு தான் இங்கு வந்த பழைய ஞாபகம் எட்டிப்பார்த்தது.

''அம்மா... அம்மா நான் உங்களை விட்டுப் போக மாட்டேன். தயவு செய்து அப்பாவுக்கு சொல்லுங்க நான் இங்கயே இருந்து நல்லா படிக்கிறேன். எனக்கு எதுவும் வாங்கித் தர வேண்டாம். நான் எதுவும் கேக்க மாட்டேன். எந்த தப்பும் செய்யமாட்டேன், தயவுசெய்து அப்பாவுக்குச் சொல்லுங்க.." என்று அழுது கொண்டிருந்தான். ''பிரவின் கண்ணா.. அப்பா என்ன செய்தாலும் உன் நன்மைக்குத் தானே செய்வார். நீ நல்ல பிள்ளையாக அழாமல் விடுதிக்கு போகணுமாம். நல்லபிள்ளையல்லா. அப்ப தானே நல்லாப்படிச்சு கெட்டிக்காரப் பையனாய் வரலாம்." என்று அம்மா கூறி ஒரு முத்தமும் கொடுத்து தான் ஒரு கிழமையிற்கு ஒரு தடவை வருவதாக வாக்கும் கொடுத்து அவனை விடுதிக்கு அனுப்பி வைத்தாள். தற்போது விடுதிக்கு வந்து ஒரு வருடம் முடிவடைகின்றது. இன்னும் அம்மா வரவில்லை காரணம் பல கூறினாள். அழுதாள், தொலை பேசியிலேயே முத்தமும் தந்தாள். அப்பா மட்டுமே வந்து பார்த்தார்.

அதே நேரம் மழைத்துளிகள் அவன் மேல் விழுந்தன. நேரமும் அதிகம் கரைந்து சென்றுவிட்டது அவன் பறித்த பூக்களும் வாடிய முகங்களாக தொங்கின. அம்மா, அப்பா வருவதாகக் கூறிய நேரமும் சென்றுவிட்டது. இப் போது அவன் கண்களிலும் நீர்த்துளிகள் மெல்ல மெல்ல அருவியாகியது.

பணிப்பெண் ஓடி வந்து அவனை குடைக்குள் நனையாதவாறு கூட்டிச் சென்று விடுதியில் அவன் தலையை துடைத்து விட்டாள். இருந்தும் அவன் கண்ணீரை அவனால் நிறுத்த முடிய வில்லை. மதிய உணவையும் வேண்டாம் எனக் கூறிவிட்டு ஓடிச்சென்று அவனது தலையணையில் முகம் புதைத்து அம்மா.., அம்மா... என்று விசும்பி விசும்பி அழுதான். அப்படியே கண் அயர்ந்தும் விடடான்.

இரவாகி விட்டது அப்போது தான் தனது பெற்றோர்களை வழி அனுப்பி வைத்துவிட்டு விஷால் பிரவினிற்கு வாங்கி வந்த அன்பளிப்புக்களுடன் விடுதிக்குள் வந்தான். பிரவின் அழுததை நண்பர்கள் கூறக் கேட்டு அவனும் மிகவும் கவலைப்பட்டான். எட்டு வயதுச் சிறுவனாயினும் தனது நண்பனிற்காக பெரிதும் கவலைப்பட்டான். தான் கொண்டுவந்த பொருட்களை தனது நண்பனின் அலுமாரியில் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு தான் சென்று வந்த கோயில் பிரசாதத்தை அவன் அருகில் வைத்துவிட்டு அவனுக்காக மனம் உருகி திருநீறும் இட்டு விட்டான்.

இரவுச் சாப்பாட்டிற்காக மணி ஒலி கேட்டது. எல்லோரும் சாப்பிடப் போகுமாறு பணிப் பெண் கூறிக்கொண்டே வந்தாள். பிரவினை எழுப்பச் செல்லும் போது விஷால்

தனது நண்பன் எழுந் தால் மறுபடியும் அம்மாவை நினைத்து அழுவான் அதனால் இன்று மட்டும் அவனை அப்படியே விட்டுச்செல்லுமாறு பணிந்து கேட்டுவிட்டு தனது அறைக்குத் தானும் சாப்பிடாது சென்றுவிட்டான்.

அவன் ஆசையாகச் செய்த வாழ்த்துமடலும் பூக்கொத்தும் பூமித்தா யின் கண்ணீரில் தோட்டத்து பெஞ்சில் நனைத்து கொண்டிருந்தது. தனது உறவுகளை விட்டுத் தனியாக.

சோபிகா ஜோர்ஜ் வாஷிங்ரன்
2009 (வர்த்தகம்)

முரண்டு பிடிக்கும் மனங்கள்

இரவின் நிசப்தம் அது. நிலாவின் வெண்மையில் அடங்கிக் கிடக்கும் ஆர வாரமற்ற உலகம், உறவுகளைத் தேடி அழும் அகதிகள் போல் நீண்டு கிடக்கும் சாலைகள். இரவுப் பனியில் நனைந்து விட்ட பச்சைமரங்கள். மார்கழி மாதம் அது! சூரியனுக்காய் நில மங்கை தவம் இருக்கும் காலம், குளிரிலே, அப்படியே உறைந்துபோகத் தோன்றுகின்ற இரவில் கூட உறங்க மாட்டாமல் தவித்துக்கிடந் தாள் பாரதி. அவளது வானவில் மட்டும் ஏன் இவ்வாறு நிறம்மாறிப் போயிற்று? ஆம்! அவள் யோசிக்கின்றாள். தனது வானம் மட்டும் இருண்டு விட்டதன் கார ணத்தை தேடுகின்றாள். ஆம்! பாரதி யால் உறங்கமுடியவில்லை. அவளும் நம்மைப்போல் சாதாரணமானவள் தான் ஆனால் வாழ்க்கையை ஏதோ ஒன்றின் காரணமாய் தொலைத்து விட்டவள்.

ஆம், பாரதியும் நம்மைப் போல் சாதாரண குடும்பத்தில் பிறந்தவள் தான். அன்பான பெற்றோர், அரவணைப்பிற்கு ஓர் அண்ணா. இரு பிள்ளைகளும் படிப் பில் படு சுட்டிகள். இருவருமே நன்றாகப் படித்து நல்ல வேலையைப் பெற்றுக் கொண்டார்கள். பாரதி ஒரு அரசசார் பற்ற கம்பனியிலே கணக்காளராக வேலை பெற்றுக் கொண்டாள். மிகவும் அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. அவர்களது வாழ்க்கைப் படகு அந்த வாழ்க் கைப் படகு. அடியோடு திசைமாறிப் போனது. பாரதியின் திருமணத்தால் தான்.

அன்று வேலையால் வந்த பார திக்கு ஒரு படத்தைக் காட்டினார் தந்தை.

''இவன் தான் செல்வன், ஒரு கம்பனியில் கணணிப் பொறியியலாள ராக வேலைபார்க்கிறான், இவனிற்கும் நம்ம பாரதிக்கும் எல்லாமே பொருத்தம், சாதகமும் பார்த்தாச்சு.''

மனைவியிடம் கூறிப் பெருமைப் பட்டுக் கொண்டார். பாரதியிடம் சம்மதம் கேட்டபோது மறுப்பின்றி அவளும் சம் மதித்தாள். அவளைப் பொறுத்தவரை அவளுக்கு சுதந்திரம் தான் முக்கியம். ஒரு புதுமைப் பெண்ணாக நல்ல வேலை செய்து தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும். என்பது தான் அவளது கனவு. அதற்கு அப்பா பார்த்த மாப் பிள்ளை தடைக்கல்லாக இருக்க மாட் டான் என்று திடமாக நம்பினாள். ஆனால் அந்த நம்பிக்கை தான் பொய்த்துப் போயிற்று.

ஒரு நல்ல நாளில், திருமணம் வெகு கோலாகலமாக நடந்தேறியது. கொஞ்ச நாட்கள் மிகவும் இனிமையா

கத்தான் கடந்தது, பாரதிக்கு ஆனால், அன்று தான் பூகம்பம் வெடித்தது.

திருமணம் நடந்து ஒரு கிழமையின் பின், தனது வேலைக்கு மீண்டும் செல்ல ஆயத்தமானாள் பாரதி. கணவனிடம் சம்மதம் கேட்கவில்லை ''என்னுடைய சுதந்திரம் அதைநான் பார்த்துக் கொள்வேன்" என்ற எண்ணம் அவளுக்கு. ஆனால் அதைக் கேட்ட செல்வனோ.
''எங்க கிளம்பிட்டாய்? இருந்து சமைத்து உடுப்புத் தோய்க்கிறத விட்டுவிட்டு"
''திரும்பவும் வேலைக்குப் போறன் ஏன்? அதுக்கென்ன?"
''என்னது, வேலைக்கோ, நீ வேலைக்குப் போய் என்னத்தைப் பண்ணப்போகிறாய்? வீட்டயே இரு சொல்லிட்டன்"
அன்று, தான் முதல் அடிவிழுந்தது. அவர்களது வாழ்க்கைக்கு. பாரதி, அவனைப் பொருட்படுத்தாது வேலைக்குச் சென்றாள். அவளைப் பொறுத்தவரை அவள் ஓர் புதுமைப்பெண் அதனால் தான் அவளிற்கு பெற்றோர் ''பாரதி" என்று பெயர் வைத்ததாக எண்ணி பெருமைப்பட்டு கொள்வாள். அவள் தன் கொள்கையை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. என்னதான் இருந்தாலும் அவள் செல்வனுக்கு மனைவி என்ற விதத்தில் ஒரு குறையையும் வைக்கவில்லை. ஆனாலும், தொடர்ந்து வேலைக்குச் சென்றாள். இதனால் வீட்டில் அவளுக்கும் செல்வனுக்குமிடையில் அடிக்கடி முரண்பாடுகள் எழும்.

அன்று, அவள் வேலையால் வீடு திரும்ப சற்றுத் தாமதமாயிற்று. ஏற்கனவே, வீடுவந்திருந்த செல்வன் அவளைப் பார்த்துக் கேட்ட கேள்வி.
''எங்க போய் ஆடிற்று வாறாய்'' கொதித்துப் போனாள் பாரதி, மிரளயமே உருவாயிற்று. அவள் திருப்பிக் கதைக்க அவன் அதற்குத் திருப்பிக் கதைக்க வாய்த் தர்க்கமே ஏற்பட்டுவிட்டது. ஆனாலும், பாரதி தனது கொள்கையை விட வில்லை. அலுவலகத்தில் சற்று வேலை இருந்ததால் செல்வனுக்காக பயப்படாது ஆறுதலாகவே வீட்டுக்கு வந்தாள். இதன் போதெல்லாம் செல்வனிடம் வசை மழை வாங்கிக் கொண்டாள்.

அன்று பாரதி அலுவலகத்திற்குச் சென்ற போது அங்கே வேலை செய்யும் முகுந்தனுடைய மனைவி இறந்து விட்ட செய்தி கிடைத்தது. இதனால், அன்று வேலை முடிந்ததும் முகுந்தன் வீட்டுக்கு பாரதி உட்பட அனைவருமே சென்றனர். அங்கே முகுந்தனது தாயற்ற மூன்று வயதுக் குழந்தை பாரதியோடு நன்றாக ஓட்டிக் கொண்டது.
''எங்கட அம்மா ஏன் படுத்திருக்கிறா? அன்ரி!"

குழந்தை அப்பாவித்தனமாய் வினவியபோது பாரதிக்கு வாயடைத்துப் போயிற்று. பின் எல்லோரும் முகுந்தனுக்கு ஆறுதல் கூறிவிட்டுப் புறப்பட்ட போதும் அந்தக் குழந்தை, பாரதியைப் பார்த்து.
''அன்ரி நாளைக்கும் வாங்கோ கட்டாயம்" என்று கூறியது. பாரதியும் அந்த தாயற்ற குழந்தையின் சந்தோஷத்திற்காய் தலையசைத்து விட்டுத்தான் வந்தாள். அன்று, மிகவும் தாமதமாக வீடு சென்றதால், செல்வன் மனம் புண்படும்படி ஏடாகூடமாய்ப் பேசினான். பாரதியும் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. மறு பேச்சுப் பேசி வாய்த்தர்க்கத்தை மேலும் கிளறினாள்.

பின், மறுநாள், வேலை முடியும் போது அவளுக்கு முகுந்தனது பிஞ்சுக் குழந்தையின் அழகிய முகம் நினைவுக்கு வந்தது. சற்று நேரம், அவன் வீட்டுக்குச் சென்று அக்குழந்தையுடன்

The Primary School Christmas Tree - 08.12.2009

Santa on the go

Santa presenting gifts to the kids

A scene from the Nativity Play

The Primary School X'mas Tree - 09.12.2010

At last! the long awaited
Santa has arrived

Singing of Carols
Grade 4

Carol singing by the
'primary seniors'

The Nativity

விளையாடி விட்டு பிரிய மனம் இல்லாது வீட்டுக்கு வந்தாள்.

''அன்ரி, ஒவ்வொரு நாளும் எங்கட வீட்டுக்கு, வாங்கோ! எங்கட அம்மாவக் காணேல்லை" என்று கூறித் தான் அவளை அனுப்பியது குழந்தை. ஆகவே, இது தொடர்ந்தது. ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும். அக்குழந்தை வீட்டுக்குச் சென்று அதை அன்பில் குளிப்பாட்டிவிட்டுத்தான் வீடு வந்தாள். தன்னிடம் அன்பு தேடும் அந்தக் குழந்தையை அவளால் சும்மா உதறிவிட முடியவில்லை. இதனால் வீடு செல்ல நேரமாயிற்று. தினமும் செல்வனின் கடும் பேச்சையும் தாங்கிக் கொண்டாள்.

அவள் நேரம் தாழ்த்தி வீடு வருவதன் காரணத்தை பாரதியின் அலுவலகத்தில் வேலை செய்யும் நண்பன்மூலம் தெரிந்து கொண்ட செல்வன் கோபத்தில் கொதித்துப் போனான். அன்றும் குழந்தையிடம் சென்று விடடு வீட்டுக்குள் நுழைந்தாள் பாரதி.
''பளீர்; பளீர்;'' அறை விழுந்தது கன்னத்தில்.
''நீ இந்த வீட்டுக்குள் இனிமேல் வர வேண்டாம்" அவள் எதோ சொல்ல முயல
''நீ ஒன்றும் கதைக்க வேண்டாம், வேறு யார் வீட்டுக்கும் போயிற்று வருவதானால் இங்கே வராதே". அவள் தனது நியாயத்தை, அந்தக் குழந்தையின் பரிதாபத்தை எடுத்துச் சொன்ன போதும், அவன் விட வில்லை. பாரதி அதற்குப் பிறகு அங்கே நிற்கவில்லை. நேரே தன் தாய் வீட்டுக்கு வந்துவிட்டாள்.

இது நடந்து இரு நாட்களின் பின், இன்றுதான் பாரதிக்கு செல்வனிடமிருந்து விவாகரத்து கேட்டு நோட்டிஸ் வந்தது. பாரதி சற்றும் தயங்கவில்லை. தாய் தகப்பன் எவ்வளவு கெஞ்சியும் அவள் கேட்கவில்லை. பாரதி கண்ட புதுமைப் பெண்ணல்லவோ அவள்! தயங்காமல் கையெழுத்து வைத்து விவாகரத்திற்கு சம்மதித்தாள் அவள். ஆனாலும், அவள் மனதில் குமுறல் இல்லாமல் இல்லை. தனது வானம் ஏன் இவ்வாறு சீக்கிரம் இருண்டு விட்டது.? ஏன்? தனது வானத்து வானவில் மட்டும் நிறம் மாறிப் போயிற்று?

அவள், எல்லாப் பொருத்தமும் நல்ல பொருத்தம் என்று கூறிய தந்தையிடம்.
''ஏனப்பா! எல்லாப் பொருத்தமும் மிகவும் பொருத்தமாக இருக்கிறது என்று சொன்ன நீங்கள், மனப் பொருத்தத்தைப் பற்றி யோசிக்கவில்லை." என்று கூற நினைத்துப் பின் தந்தையினது ஒரு கிழமையாக எடுக்காத தாடியையும் ஒளியை மறந்த கண்களையும் பார்த்து விட்டு வாய் அடைத்து ஊமையாகிப் போனாள்.

பாரதி, தனது வானம் மட்டும் இருண்டு விட்டதன் காரணத்தை கண்டறிந்து விடடாள். ஆம் அவர்களிடம் பணம் இருந்தது. ஆனால் பொருத்தமான மனம் இருக்கவில்லை. பாரதியின் இன்றைய நிலைக்குக் காரணம் ''முரண்டு பிடிக்கும் மனம்" தான் என்பதை அவள் கண்டு பிடித்துவிட்டாள். பாரதி மட்டுமல்ல நம்மிலும் எத்தனையோ பேரின் வானம், இந்த முரண்படுகின்ற எண்ணங்கள் காரணமாக இருண்டுதான் கிடக்கின்றன. நம்மில் கூட இன்றும் எத்தனையோ பாரதிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள்! இனியும் தோன்றுவார்கள்.

கஜானனி ஏகானந்தசிவம்
2011

கல்வியின் முக்கியத்துவம்

கல்வியே எமது வாழ்க்கையின் முக்கியமான செல்வமாகும். சிறுவர்களாகிய நாம் இளமையிலேயே ஆர்வத்துடன் கல்வி கற்க வேண்டும். அதனையே திருவள்ளுவரும் ''இளமையிற்கல்வி சிலையில எழுத்து'' என்று கூறியுள்ளார். கல்வி திருடரால் திருடப்படமாட்டாது, தீயினால் அழியாது, கொடுக்கக் கொடுக்க கூடுமேயன்றிக் குறையாது. கல்விச் செல்வத்தை நாம் பெற்றுவிட்டால் மற்றைய எல்லாச் செல்வமும் தானாகவே எம்மை வந்து சேரும். இவ்வுலகில் நற்பண்புள்ளவர்களாக நாம் வாழ்வதற்குக் கல்வியே துணை புரிகிறது. இவ் நவீன உலகில் வளர்ந்து வரும் தொழில் நுட்ப மாற்றங்களை அறிந்து அதற்கேற்ப நாமும் வாழ கல்வியே அவசியமாகின்றது. எனவே கருத்துடன் கல்வி கற்று சிறப்புடன் வாழ்வோமாக!.

தானியா பிரிய மரியா நேசக்குமார்
தரம் 4

மாலைப்பொழுது

ஏழு வர்ணப் புரவி பூட்டி ஒரு பொற்தேர் சக்கரமேறி நீல வானில் பவனிகண்ட உதயசூரியன் அந்திப் பொழுதானதும் தனது பொற்கதிர்களை ஒடுக்கிக் கொண்டு மேற்கு அடிவானில் மெல்ல மெல்ல அமிழத் தொடங்குகிறான். பொற் கதிர்களின் வெம்மையை ஆழ்கடலின் குளிர்ச்சி தழுவிக் கொள்கிறது. கூடு விட்டு நீல வானில் சஞ்சரித்த புள்ளினங்கள் உண்ட மகிழ்வுடனும் ஊட்டும் ஆசையுடனும் தமது இருப்பிடம் நோக்கி விரைகின்றன. ஆவலுடன் எதிர் பார்த்து திருந்த அருமைக்குஞ்சுகள் தமது உறவு களை இன்முகத்துடன் இனிய கீதம் இசைத்து ஆரவாரிக்கும் அழகே அழகு. எருமைகளும், கடாக்களும் தத் தமது தொழுவம், பட்டி நோக்கி விரைகின்றன. அங்கே அம்மிருகங்கள் இரை மீட்டு அசைபோடும் அழகுதான் என்னே! ''சந்திர பகவானே வருக'' என சகல உயிரினங்களும் சந்திரனை வரவேற்க ஆரவாரப்படுகின்றன. பள்ளிச்சிறார்களும், பயிற்சி வீரர்களும் தத்தமது கடமைகளை முடித்துக் கொண்டு புத்துணர்ச்சியுடன் வீடு திரும்புகின்றனர். உழவன் தனது உழவுதொழிலின் மேன்மையை உணர்ந்தவனாய், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டு உழைத்தவனாய வீடு திரும்புகின்றான். ஆலய மணியோசை தொனிப்பிலோ தெரியவில்லை. விண்மீன்கள் வைரக்கல் போல விழித்தெழுகின்றன. ஆலய மணியோசை ஆதவனின் மறைவிற்கும் திங்களின் உதயத்திற்கும் ஆரவாரம் செய்கின்றது. அழகிய மல்லிகையும் முல்லையும் மொட்டவிழ அல்லியும், ஆம்பலும் வாடிச் சோர்கின்றன. ஆதவன அமைதியாக நீராட வானவீதியில் அழகிய திங்கள் உலாவரத் தொடங்குகின்றது.

அன்றியா சாந்தனா றொபேட்
தரம் 6

இனிமைத் தமிழ்மொழி

தமிழ்மொழி இனிய மொழி. கவி ஞர்கள் பலர் தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி, இலக்கிய வளம் பற்றிப்பாடியுள்ள னர். தமிழுக்கு அமுதென்று பெயர் என்று ஒரு கவிஞர் பாடியுள்ளார். ''செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடி னார் கவிஞர் பாரதி. இத்தகைய சிறப்பு வாய்ந்த இனிமைத் தமிழ்மொழியை எமது தாயை நேசிப்பது போல நாம் நேசிக்க வேண்டும். உயிரினும் மேலாகப் போற்ற வேண்டும்.

காவியங்களும் காப்பியங்களும் தமிழ்மொழிக்கு வளம் சேர்ப்பன, இனி மைத் தமிழ் மொழியை அழகுபடுத்து வன. சங்ககாலம் தொடக்கம் இன்றுவ ரைக்கும் அரசர்களும் புலவர்களும் அறி ஞர்களும் தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்தனர். ஔவையார், திருவள்ளுவர், காப்பியங்கள், காவியங் களை எழுதிய புலவர்கள், பாரதி, பு மைப்பித்தன், பாரதிதாசன் எனப் பற்ப புலவர்கள் எம் இனிமைத் தமிழ்மொழியின சிறப்பை தொன்மையை காலத்திற்குக் காலம் எடுத்தியம்பி வந்துள்ளனர்.

பல சிறப்புக்களை உடைய தமிழ் மொழியை, எம் உயிருக்கு மேலான எம் இனிமைத் தமிழ்மொழியை நாமும் என்றென்றும் போற்றிப் பாதுகாப்போமாக.

நுத் நீலோஷனா பவுலினஸ்
தரம் 7

மலரும் பொழுதினிலே...

புலரும் காலைப் பொழுது இனிதே பிறக்க வேண்டுமென்று கூறி நிலா முகம் மறைத்தது காலைப் பொழு தினிலே சூரியனின் வருகைக்குக் கட்டி யம் கூறுவது போல சேவல்கள் சிறகடித் துக் கூவுகின்றன. சின்னஞ்சிறிய பறவை களும் பண்ணிசை பாடுவது போல தமது ஆரவாரத்தினைத் தெரிவித்தன. இவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது ஆதவன் மெல்ல முகம் காட்டி மலர்கின்றான்.

ஆதவனைக் கண்டதும் சூரிய னைக் கண்ட பனிபோல அல்லிப் பூக் கள் தமது வாழ்க்கையை முடித்துக் கொள்ள, தாமரைப் பூக்கள் தமது வாழ்க்கையை ஆரம்பிக்கின்றன.

மாதா கோவில் மணியோசை கேட்கிறது. உறங்கிக் கொண்டிருந்த உலகம் மெல்ல மெல்ல விழித்தெழு கின்றது. சேவகர் பணியை முடித்து வீடு செல்வது போல வீடுகளில் சுடர்கொடுத் துக் கொண்டிருந்த விளக்குகள் அணை யத் தொடங்கின. அமைதியாக உறங் கிக் கொண்டிருந்த மனிதர்கள் படபட வென்று எழுந்து தமது கடமைகளைச் செய்வதற்குத் தயாராகின்றனர்.

மாணவர்கள் எழுந்து பாடசா லைக்குச் செல்ல ஆயத்தமாகின்றனர். வீதிகளில் வாகனங்களின் ஆரவாரம் கேட்கத் தொடங்குகின்றது. மெல்ல மெல்ல ஆதவன் தன் கொடூர நாக்கு களை புவியின் மீது வாரி வீசத் தொடங் குகின்றான். அழகாக, இனிதாக மலரத் தொடங்கிய காலைப்பொழுது ஆரவாரத் துடன் கோலாகலமாக ஆதவனின் ஆட்சி யினுள் மெது மெதுவாக நுளைகின்றது.

மரிய றூபினி யூட் வென்சர்
தரம் 8

மனதைக் கவரும் அந்திவானம்

சூரியனின் பொற்கதிர்களோடு கருமேகங்கள் போர்தொடுக்க நாணம் கொண்ட பகலவன் மெல்ல வானை விட்டு அகன்று போகிறான். மலர்ந்த மலர்க ளெல்லாம் உதிர்ந்து பூமியோடு சங்க மிக்கின்ற வேளை காரிருள் மெல்லப் படரத்தொடங்குகிறது. சகல ஜீவ ராசி களும் மெல்ல அமைதி பெறத் தொடங் குகின்றன.

கருமேகங்களிடையே மெல்லக் கண் சிமிட்டிக் கொண்டு வெளிவரும் நட்சத்திரப் பெண்கள் சூழ நாயகனாய் முழுமதிச் சந்திரன் வானில் உலா வர அதை வரவேற்பது போல் வெள்ளை நிற மலர்கள் எல்லாம் மலர்ந்து தென் றலில் வாசனையைத் தெளித்து விடு கின்றன. மெல்லக் காற்றில் தலைய சைக்கும் கிளை மரங்கள், நடனமாடும் பெண் போலவும் மரக்கிளைகளின் நிழல் நிலத்திலிடப்பட்ட கோலம் போலவும் தெரியும் அழகுதான் என்னே.

மேகங்களோடு ஒளிந்து விளை யாடும் பௌர்ணமி நிலவின் ஒளிபட்டு சலசலக்கும் அருவிகளும் ஓயாமல் ஓடும் அலைகளும் வெள்ளி ஓடை எனக் காட்சி தருவது தனி அழகு. காற்றோடு கலந்து வரும் தென்றலைக் கையில் அள்ளிக் கொண்டு பாரெங்கும் இருளை நீக்கி ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் நிலாவானது, திரைவிலகி நிற்கும் சாளரங்கள் ஊடே எட்டிப்பார்த்து மனங் களைக் கொள்ளை கொள்ளவும் தவற வில்லை. இடையிடையே கண்சிமிட்டும் விண்மீன் காரிகைகள், புதிதாக மலர்ந்த மலர்கள் போல் காட்சி தருவது ஒரு இரம்மியமான உணர்வை மனதினுள் இழையோடச் செய்யும்.

கார்மேகங்களிடையே வெண்ணி லவும் விண்மீன்களும் அவற்றிற்காகப் பூத்துக்குலுங்கும் வெண்மை நிறைந்த வாசனை மலர்களும், வெள்ளியோடை களும், கோலமிடும் நிழல்களும் மனதை யும் உடலையும் வருடிச் செல்லும் தென் றல் காற்றும் இயற்கையால் அள்ளிக் கொடுக்கப்பட்ட ஒரு கொடை. உலா வரும் நிலவினது அழகைப் பார்க்க எத்தனை இரவுகள் விழித்திருந்தாலும் மனதிற்கும் விழிகளுக்கும் விருந்தாகவே அமையும். வானில் தெரியும் நிலவானது அன்பையூட்டும் அன்னையாகவும் மனதை வருடும் தோழியாகவும் வானில் வாழும் காட்சி இந்த உலகில் பணம் கொடுத்தாலும் கிடைக்காத ஒன்றாகும்.

தக்ஷாயினி சந்திரமோகன்
தரம் 8

ஒற்றுமையால் மேன்மை உண்டாகும்

மானிடர் யாவரும் இப்பூமியின் சொந்தங்கள். அவர்களைப் பெற்றெடுத்த வள் இப்பூமாதேவி. அவளின் மடியில் ஒன்றிணைந்து பிறந்தவர்களே இப் பூமி யில் வாழும் மானிடப் பிறவிகள். அவ் வாறு ஒரு தாய் வயிற்றில் பிறந்த இம் மானிடர்களின் இடையே எவ்வளவு போதல்கள், எவ்வளவு குழப்பங்கள். இவை யாவற்றையும் பொறுத்து இக் கொடூர மானிடர்களை இன்னும் தன் மடியில் பூமாதேவி சுமந்து வைத்திருக் கின்றாள் எனின் அதற்குக் காரணம் அவளுடைய பொறுமையே ஆகும்.

Bishop Chickera Meeting the Staff of C.G.C & S.J.C
09.06.2009

Bishop Duleep De Chickera addressing the gathering

Principal,
Mrs. D. Thuseetharan's address

Lord Bishop
& Mrs. Chickera
with the staff of
St. John's
and Chundikuli

College Activities

The 59th Combined Carols
13.11.2010

Carols by the youth of the North
at St. John's

Art Award

Vinuja Vimalathasan of Grade 9
receiving her Gold medal
for her piece of art from the
Hon. Minister of Cultural Affairs
Mahinda Yapa Abeywardena,
at the John de Silva Memorial Hall,
Colombo, on 1st October 2009.

Hillwood visits CGC
9.10.2009

Students of both schools

Shramadana at CGC
10.10.2010

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த மானிடர்களுக்கு ஏன் இந்த அல்லல்கள்? ஏன் இந்தத் துன்பங்கள்? இவை அனைத் திற்கும் பதில் ஒன்றே ஒன்று தான். அவர் களுக்கிடையில் இன்னும் புனிதமான ஒற்றுமை நிலவவில்லை. ஒவ்வொருவருக கிடையிலும் போட்டி, பொறாமை. நாம் அனைவரும் இப்பூமித்தாயின் மைந் தர்கள் என எண்ணி ஒவ்வொருவரும் ஒற்றுமையாக வாழ்ந்தால் இப்பூமியில் நிச்சயம் மேன்மை உண்டாகும். காட்டில் வாழும் விலங்குகள் கூட ஒற்றுமையே பலம் என்ற கோட்பாட்டிற்கமைய ஒற்று மையாக வாழ்கின்றன. விலங்குகளுக் குக் கூட ஒற்றுமையின் பலம் விளங்குகின்றது.

அனைத்து மதங்களும் ஒற்று மையை வலியுறுத்துகின்றன. ஒற்றுமை யினால் மேன்மை உண்டாகும், என்ப தனை விளக்குவதற்காக பழமொழிகள், பல கதைகள் காணப்படுகின்றன. பாட சாலையில் மாணவர்கள் தனியே செய் யும் ஒரு செயற்பாட்டிற்கும் குழுவாக மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கும் இடையே எவ்வளவோ வேறுபாடுகளைக் காணலாம். தனியாக மேற்கொண்ட அச்செயற்பாட்டிற்கு தனி ஒருவரின் பங்க ளிப்பு மட்டும் கிடைத்ததனால் அதில் அவருடைய சிந்தனை மட்டுமே புலப்பட் டிருக்கும். ஆனால் குழுவாக மேற்கொள் ளப்பட்ட செயற்பாட்டில் பல்வேறுபட்ட மாணவர்களின் கருத்துக்களும், சிந்த னைகளும், பங்களிப்புகளும் புலப்பட்டி ருப்பதனால் அச்செயற்பாடு அதிக தரமுடையதாக அமைகின்றது.

ஒற்றுமையுடன் வாழும் சூழலில் எவ்வித சண்டைகளையோ சச்சரவுக ளையோ நாம் காண முடியாது. அவர் கள் தம் அயலவர்கள் ஒவ்வொருவரை யும் தம் சொந்தங்கள் எனக் கருதிச் செயற்படுவர். ஒற்றுமையினால் அழிவு உண்டான நிகழ்வு உலகில இல்லை. ஆனால் ஒற்றுமையின்மையினால அழிவு உண்டான நிகழ்வுகளோ பல. எனவே ஒற்றுமையுடன் வாழ்ந்து உலகை மேன்மைப்படுத்துவோம்.

கிருஷ்னி உதயகுமார்
தரம் 9

மனிதனும் சூழலும்

21ஆம் நூற்றாண்டில் தடம் பதித்துள்ள விஞ்ஞானயுக மனிதர்கள் நாம். விஞ்ஞானத்தின் விந்தையினால் மெஞ்ஞானத்தை மறந்து பூமியை அழி வுப்பாதைக்கு அழைத்துச் செல்கின் றோம். நவீன கண்டுபிடிப்புக்களினாலும் புதிய தொழில் நுட்பங்களாலும் முன் னேறியுள்ள நாம் இவற்றின் கொடூ ரமான பின் விளைவுகள் என்ன என்ப தனை அறியமுடியாத அப்பாவி ஜீவன்க ளாக இருக்கிறோம். பனிமலை கரை கின்றது பூமியதிர்ச்சி, சூறாவளி, சுனாமி எனத் தற்போது பத்திரிகைகளிலும், தொலைக் காட்சிகளிலும் பவனிவருகிற நிகழ்ச்சிகள் பல. இவற்றைவிடவும் அதிகம் பாதகமான நிகழ்வுகளை இனிவரும் மனிதர்கள் அனுபவிப்பார்கள். இவற்றுக் கெல்லாம் ஆரம்பம் என்று ஒரு விடயம் இருக்கிறது. அது என்ன என்று நோக்கு மிடத்து ஒரு அதிர்ச்சியூட்டும் தகவலாக அமைந்திருப்பது மானிடவர்க்கமே இவை எல்லாவற்றிற்கும் அடித்தளம் என்பதாகும்.

சூழலுக்குத் தீங்கு விளைவிக் கும் மனிதச் செயற்பாடுகள் யாவை என்று நோக்குமிடத்து, புவி வெப்பமாதல்

பாரிய அளவு சர்ச்சைக்குரிய விடயமாகி வருகிறது. பொலித்தீன் பாவனை, எரி பொருட் பாவனை அதிகரித்துச் செல் லல், ஓசோன் படல விரிசல்கள், இரசாய னப் பொருட் பயன்பாடு போன்ற பல்வேறு பட்ட காரணிகளை புவி வெப்பமயமாத லுக்குரிய காரணிகளாக வகைப்படுத்த லாம். உலகின் பல்வேறு நாடுகள் பொலித்தீன் பாவனைக்குத்தடை விதித் திருப்பது நாமறிந்த ஒரு விடயம். ஆனால நமது நாட் டில் அவ்வாறான சட்டங்கள் இன்னும் அமுலுக்கு வரவில்லை. நம் நாட்டில் இது வரையும் அதிகம் பாதக மான பிரச்சினைகள் ஏற்படவில்லை என்றே கூறலாம்.

புவி வெப்பமாதலின் மற்றுமொரு அடிப்படைக் காரணம் அதிகளவிலான எரிபொருட் பாவனை ஆகும். இதனை முழுவதும் ஒழிக்க முடியாவிட்டாலும் குறைப்பது சாலச் சிறந்தது. அது மட்டு மல்ல. பல்வேறு இரசாயனத் திரவியங் களைப் பயன்படுத்தி மனிதன் நிலத்தை மட்டுமல்ல நீர் நிலைகள், வளி என்பவற் றையும் மாசுபட வைக்கிறான். கால ஓட்டத்தில் ஒரு சிலின்டர் ஒட்சிசன் வாயு கூட பணத்திற்கு வாங்க வேண்டிய பரிதாப நிலை உருவாகிவிடும்.

இவ்வாறெல்லால் பூமி அன் னையை மாசுபடுத்திய மனிதன் இப் போது செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்வ தற்கு முற்படுகின்றான். தற்போது செவ் வாய் கிரகத்தில் மனிதன் உயிர்வாழ லாமா? என்ற மாபெரும் ஆராய்ச்சி நடந்து வருகிறது. இதனால் பாழாவது நம் உயிர் காக்கும் ஓசோன்படலம் ஓசோன் படலத்தில் விண்கலங்களினால். ஏற்படும் விரிசல்களால் சூரியனிலிருந்து வெளிவரும் புற ஊதாக்கதிர்கள் நேரடியாக மனிதனை வந்தடைகின்றன. இதனாலும் புவிவெப்பமடைகின்றது.

மனிதனானவன் சூழலை நேசிக் கத் தெரிந்தவனாக வாழவேண்டும். அப்போதே அவனும் அவனது சுற்றமும் நலமாக வாழ முடியும். 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி முதல் 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வந்த நிஷா சூறாவளிவரை எத்தனை எத்தனை இயற்கை அனர்த்தங்கள்.

இன்றிலிருந்து திருந்துவோம். உலகினைத் திருத்துவோம். எமது நல்ல செயல்களினால் சூழலைக் குளிரச் செய்வோம். ஒரு மரத்தை வெட்டும் போது இரண்டு புதிய மரங்களை நாட்டு வோம். அனைத்திற்கும் ஆதாரம் தாவரங்களே ஆகும். தாவரங்களை அழிக்காது, பொலித்தீன் பாவனையற்ற உலகை உருவாக்கி எம் உலகினைக் காப்போம். இனிவரும் தலை முறையின ருக்கு இனிய உலகை வழங்குவோம்.

அன்னையின் பாரம்
உன்னை ஈன்றவுடன் முடிந்துவிடும் -பூமி
அன்னையின் பாரம்
நீ இறக்கும் வரை இருக்கும்.

எம்மைச் சுமக்கும் தாயை என் றென்றும் அழியாது பாதுகாப்பது மானி டராகிய எமது தலையாய கடமையும் பொறுப்புமாகும்.

சஜீவா ஜெயக்குமார்
தரம் 9

அன்பால் அகிலத்தையும் வெல்லலாம்

அன்பு என்பது வெறும் மூன் றெழுத்தால் ஆன சொல் மட்டுமல்ல. அதற்குள் இருக்கும் ஒவ்வொரு விடய மும் தேன் போன்றது. இவ் உலகில் அன்பில்லாமல் எவரும் இருக்க முடி யாது. ''அன்பும் சிவமும் ஒன்று'' எனத் திருமூலர் கூறியுள்ளார். ''அன்பே சிவம்'' எனவும் கூறியுள்ளார். சிவன் அன்பு வடிவமானவராகப் போற்றப்படுகிறார். இவ்வுலகில் அன்பு இல்லாமல் வாழும் மனிதரைக் காண்பது அரிதிலும் அரிது.

அன்பு இல்லாத நண்பர்கள் இரு வர் சேர்ந்து படிக்க முடியுமா? இல்லை அன்பு இல்லாத மாணவர்களிடத்தே ஆசிரியர் பாடத்தை அழகுறக் கற்பிக்க முடியுமா? எல்லாவற்றிற்கும் அடிப்படை யாய் இவ்வுலகில் விளங்குவது அன்பே யாகும். ஓர் குடும்பத்தில் அன்பு இல் லாத மனைவி, கணவர், பிள்ளைகள் காணப்படுவார்களாயின் அதனைக் குடும்பம் என்ற சொல்ல முடியாது. நாம் பிறர் மேல் அன்பை செலுத்தும் போது அதனைவிடப் பல் மடங்காகப் பிறர் எம் மீது அன்பைப் பொழிவார்கள். சிறைச் சாலையிலிருக்கும் கைதி கூட தான் எப்போது சிறையிலிருந்து விடுபட்டு மனைவி, மக்களோடு அல்லது தன் குடும்பத்தோடு சேர்ந்து அன்பாக வாழ் வேன் என்றே எண்ணுவான். அன்பானது சகல விடயங்களுக்கும் அடிப்படையான ஓர் அம்சமாகத் திகழ்கிறது.

தற்போது அன்பானது ஒவ்வொரு வருக்கிடையிலும் உண்மையானதாக உள்ளதா என்பது ஒரு கேள்விக் குறியாக உள்ளது. அன்பானது மனதிலிருந்து தோன்ற வேண்டும். அன்பில்லாமல் சக லத்தையும் வெறுத்தொதுக்கி வாழ்பவன் பிணமாகத் தான் நடமாட முடியும். ஓர் அலுவலகத்தின் முகாமையாளர் தம் ஊழி யர்களிடம் அன்பாகப் பழகுவார் எனின் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மனமு வந்து சகல வேலைகளையும் செய்வார் கள். அலுவலகமும் உயர்ச்சியடையும். முகாமையாளர் அன்பின்றி வெறும் கடமை உணர்ச்சியுடன் மட்டும் செயல் படுவாராயின் ஊழியர்களும் கடமை உணர் வுடன் மட்டும் வேலைபார்ப்பார்கள்.

இவ்வுலகில் எதனைச் செய்ய வேண்டுமாயினும் அன்பினால் செய்ய முடியும். ''யாவர்க்குமாம் பிறர்க்கொரு இன்னுரை தானே'' எனத் திருமூலர் கூறுவதிலிருந்து நாம் தீய சொற்களைப் பிரயோகிக்காது அன்பாக, இனிமை யான சொற்களைப் பிறரிடம் பேச வேண்டும். அன்பின்றி வாழும் வாழ்க்கை போலியானது. சிலர் பணம் வந்தால் மாத்திரமே எம்மோடு இருப்பார்கள். இன்பங்களில் மாத்திரமே எம்மோடு கூட இருப்பார்கள். ஆனால் துன்பம் வரும் போதும் பணம் எம்மிடம் இல்லாத போதும் எம்மைவிட்டு விலகிவிடுவார்கள்.

நாம் உண்மை அன்பையும் போலி அன்பினையும் உணரவேண்டும். வேறு பிரித்தறிய வேண்டும். அவ்வாறு வேறு பிரித்தறிந்தால் அகிலத்தையும் வெல்லலாம். அன்பு நெறியைக் கடைப் பிடித்து அகிலத்தை வெல்வோம்.

பாலேந்தினி பாலசுப்பிரமணியம்
தரம் 10

அன்னை பூமி காப்போம்

பரந்த வானையும் நீண்டு விரிந்த சமுத்திரங்களையும் உயர்ந்த மலைகளையும் அடர்ந்த வனங்களையும் குளிர் நீர்நிலைகளையும் ஆடையாகக் கொண்ட எம் அன்னை, பல இன பன்மொழி மக்களுக்கும் ஒரே ஆதாரமாக உள்ள அன்னை. சுவாசிக்கும் காற்றையும் உயிர் காக்கும் உணவு நீரையும் எமக்கு அளிக்கும் எம் அன்னை பூமி.

இயற்கை அழகுடன் விளங்கும் எம் அன்னையை மானிடன் மட்டும் ஏன் சீண்டிச் சீர்குலைக்கிறான். இயற்கை தான் தனக்கு ஆதாரம் என அறிந்திருந்தும் அவனது இயற்கை மீதான ஆக்கிரமிப்பு இன்றும் நீண்டு செல்கிறது.

மனிதனின் அதிநவீன தொழில் நுட்பவளர்ச்சியினாலும் துரித கைத் தொழில் புரட்சியாலும் இயற்கை வளங்கள் சுரண்டப்படுகின்றன. பருவகாலங்கள் நீர்வட்டம் என்பவற்றைச் சரியாகப் பேண உதவும் காடுகள் இன்று நகரமயமாதல் மற்றும் குடியேற்றவாதம் என்பவற்றால் அழிக்கப்பட்டு வருகின்றன. மேலும் குப்பைகளை அகற்றும் வழிகளாக நீர்நிலைகளும் நச்சு வாயுக்களை வெளியேற்றும் இடமாக வாயுக்கோளமும் மாறிவிட்டன. விலங்கினங்கள் வேட்டையாடப்படுவதால் உணவுச் சங்கிலி பாதிக்கப்படுகின்றது.

இவற்றினால் மனிதன் தன்னையும் அன்னை பூமியையும் பல்வேறு அபாயங்களுக்குள் தள்ளுகின்றான். பூகோளம் வெப்பமடைதல், பருவநிலை மாற்றங்கள், உணவு, நீர்த்தட்டுப்பாடு, இயற்கை சீற்றங்கள் என்பன இன்றைய வாழ்வில் தினசரி நிகழ்வுகளாக மாறியுள்ளன. பல்வேறு விஞ்ஞானிகளும், ஆராச்சியாளர்களும் பூமியின் கடைசி நாளைக் குறித்துக்கொண்டுள்ளனர். இன்று உலகின் முடிவு பற்றி பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான இயற்கை அழிவுகள் தொடருமெனின்,

''வானகமே, இளவெயிலே, மரச்செறிவே
நீங்களெல்லாம் கானலின் நீரோ''

என்ற பாரதியின் வரிகள் மெய்யாகிவிடும். மனிதனின் வாழ்வாதாரமாய் விளங்கும் பூமி, மனிதனுக்குச் சாதகமற்ற ஒன்றாக மாறிவிடும். இன்று பசுமையான மரங்களும், அடர் வனமும் இருந்த இடம் தெரியாமல் கைத்தொழிற்சாலைகளால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இந்த நிலை தொடரும் வாய்ப்பை நாம் வழங்கலாகாது.

பூமி பல்வேறு சிக்கல்களில் திணறும் போது உலக நாடுகள் பல்வேறு பிரகடனங்களையும் ஒப்பந்தங்களையும் மேற்கொள்கின்றன. எனினும் சில சந்தர்ப்பங்களில் இவை வெற்றுப் பிரகடனங்களாக மாறுவதுமுண்டு உலக மக்கள் அனைவரும் உலக முடிவு பற்றிய படங்களிலும் நாவல்களிலும் ஆர்வம் காட்டுகின்றனரே ஒழிய பூமியைக் காக்கும நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் வெகு சிலரே. ஒவ்வொரு நாடும் மற்றைய நாடுகளைக் குற்றம் சுமத்துவதிலேயே குறியாக உள்ளன. இவ்வாறான குற்றச் சாட்டுக்கள், பிரகடனங்கள், ஒப்பந்தங்கள் என்பன பூமியைப் பாதுகாப்பது தொடர்பாக பயனளிப்பதாய் தெரியவில்லை.

இவற்றைப் புறந்தள்ளி ஒவ்வொரு புவிவாசியும் தம்முள்ளே சூழ

லைக் காப்போம் என்று உறுதிபூணுதல் வேண்டும். எம் புவியைக் காத்து அதை எதிர்காலச் சந்ததிக்கு கையளிக்க வேண்டும் என்ற எண்ணம் உலகளாவிய ரீதியில் தோன்றிவிட்டால் எம் பூமியின் ஆயுள் பலமாகும்

''விண்வெளியில் வேற்றுக்கிரகம் தேடும் மானுடமே நாம் வாழும் கிரகத்தைச் சுத் தப்படுத்தி புது உலகம் படைப்போம் வருக"

தாரணி சிவராஜா
தரம் 10

காலத்தின் தேவையாய் விஞ்ஞான தொழில்நுட்பம்

''மீனைக்கண்டான் கப்பல் செய்தான்
பட்சியைக் கண்டான் விமானம்
படைத்தான்
சந்திரனைத் தொட்டான் சாதனை
புரிந்தான்''

இன்றைய இருபத்தோராம் நூற் றாண்டிலே விஞ்ஞான தொழில்நுட்பத் தின் துணைகொண்டு மனிதனின் வாழ்க்கைப் பயணம் வீறு நடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஆதியிலே கல்லையும் கல்லையும் உரசி நெருப் பைக் கண்டுபிடித்தான் மனிதன். அக் கண்டு பிடிப்பு பலவாகப் பல்கிப் பெரு கியது. தனது தேவைகளை நிறை வேற்ற மனிதன் அவற்றைப் பயன்படுத் தினான். பயன்படுத்தி வருகின்றான். பயன்படுத்துவான்.

விஞ்ஞானம் என்பது மனிதனின் சிந்தனாசக்தி, பகுத்தறிவு, ஆராய்ச்சி என்பவற்றைக் கொண்டு தன்னிலும் சக்தி மிக்க இயற்கையைத் தனது கட்டுப்பாட் டின் கீழ் கொண்டுவருவதற்காக மனிதனால உருவாக்கப்பட்டது. நுண்ணிய அணு முதல் நூதனமான விண் ணியல் வரை ஆய்ந்தறிய இவ்விஞ்ஞானமே வழிவகுத்தது.

புல்லும், பூடும், புழுவும், மரமும் பரிணமித்த பாதையிலே தோற்றம் பெற்ற மனிதன் இயற்கைச் சக்திகளைத் தனது தேவைக்கமைய மாற்றியமைக்க விஞ் ஞான தொழில்நுட்பமே காலாயமைந் தது. ஆதி மனிதன் தனது சிந்தனைத்தி ருப்பங்களும், செயலார்வமும் ஒருசேர ஏற்றிவைத்த அகல் இன்று பிரகாசமாய் ஒளிர்கின்றது.

இன்று விஞ்ஞானம் தொடர்பாடற் துறை, போக்குவரத்துத்துறை, கல்வித் துறை, மருத்துவத்துறை என நுழையாத துறைகளே இல்லை எனலாம். இன்று மனிதன் தனது கருத்துக்களைப் பரிமா றித் தொடர்பாடல் புரிவதற்கு முற்றுமுழு தாக உதவிநிற்பது தொழில் நுட்பமே. தொலைபேசி, மின்னஞ்சல் தொலைக்காட்சி, வானொலி, இணையம், கணனி, தொலை நகல் போன்ற தொடர்பாடற் சாதனங்கள் எமது அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய மிகவும் துணையாக உள்ளன.

மருத்துவத்துறை இன்று சாவுக்கே சாவு மணி அடிப்பதுபோல துரிதவளர்ச்சி கண்டுவிட்டது. மனிதன் தனது தேவைக் கேற்ப உறுப்புக்களை மாற்ற இன்று விஞ்ஞானம் வழி கோலுவதோடு மிகவும் முன்னேறிவிட்ட மரபணுவியல் இன்றைய காலகட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பலவற்றை சுமுகமாகத் தீர்க்கவும் துணைபுரிகின்றது.

மனித வாழ்வில் ஏற்படும் பல

சிக்கல்களை அவன் இலகுவில் தீர்ப்ப தற்கு புதிய கண்டுபிடிப்புக்கள் வழிவகுக் கின்றன. மருத்துவத்துறைசார் கண்டுபி டிப்புக்கள் மனிதனின் ஆயுளை நீடித்து அவன் வாழ்வாங்கு வாழத் துணை புரிகின்றன.

இன்றைய கணனியுகத்திலே இணையத்தின் வழியூடான கல்வி மாண வர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகும். தொலைதூரக் கல்வியை மாணவர்கள் கற்கவும், அவர்கள் பிரபல கல்லூரிகளில இணையவும் இன்றைய கணனியூடான கல்வி வழிவகுக்கின்றது. மாணவனின் தேடிக்கற்றல் திறனை இணையம், வளர்த தெடுக்கிறது. இவ்வாறு கல்வித்துறை யின் ஒவ்வொரு கட்டத்திலும் விஞ்ஞா னத்தின் பங்கு அளப்பரியது.

போக்குவரத்தை எடுத்து நோக்குவோமெனின் உலகின் எந்த மூலைக்கும் மிகவிரைவில் செல்வதற்கு இன்றைய அதிவேக வாகனங்கள் துணை செய்கின்றன. நகரிலிருந்து நகர் சென்ற மனிதன் இன்று கோளிலிருந்து கோளுக் குப் பயணிக்கின்றான். செவ்வாய்க்கிரகத் தில் வாழ்வதற்கான ஆய்வுகள் துரிதகதி யில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. வருங்காலத்தில் மனிதன் ஒரு பால் வெளியிலிருந்து இன்னொரு பால் வெளிக்குப் பயணித்தாலும் ஆச்சரியப்படு வதிற்கில்லை.

இவ்வாறு மனித குலத்திற்குப் பல நன்மைகளை விஞ்ஞானம் அள்ளி அளித்துக்கொண்டிருக்கிறது. எனினும், '' எந்தச் செயலுக்கும் எதிரும் சமமு மான மறுதாக்கம் உண்டு'' என்ற விஞ் ஞானி நியூட்டனின் மூன்றாம் விதிக் கமைய விஞ்ஞான வளர்ச்சியினால் பார தூரமான விளைவுகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பது கண்கூடு.

மனித சமூகம் விஞ்ஞானத்தின் பாதக விளைவுகளால் அழிவை எதிர் நோக்கி நிற்கின்றது. சூழல் மாசடைதல், காடழிப்பால் வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் அளவு அதிகரித்தல், அமில மழை, துருவங்களிலே பனிக்கட்டி உருகுவதால் ஏற்படும் கடல்மட்ட அதி கரிப்பு, ஓசோன் படையில் ஏற்பட்ட துவா ரம், அதன் விளைவால் புதிய நோய்கள் என விளைவுகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

இன்று மனிதநேயம் மனித விழு மியம் என்பன அருகிவிட்டன. முன்னோர் களிடம் காணப்பட்ட அரிய பல பழக்கவ ழக்கங்களை இளஞ்சந்ததியினர் தொலைத்து வருகின்றனர். இன்று இலங் கையை ஆட்கொண்டிருக்கும் புதுவகை யான தொற்றுநோயாக ''பேஸ்புக்'' உள்ளது. இணையம் நமக்குப் பல நன்மைகளை தருகின்றதெனினும் தீமை களும் பல உள. இதனால் பலர் ஏமாற் றப்பட்டிருக்கின்றனர் ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் இருந்து கொண்டே இருப்பார்கள்.

அளவோடு எரிந்தால் விளக்கு அளவுக்கு மீறினால் அது நெருப்பு. விஞ்ஞானம் மனிதனால் மனிதனுக்காக உருவாக்கப்பட்டது. அதனைப் பயன் படுத்தும் வகையறிந்து பயன்படுத்தினால் அளப்பரிய பயன்களைப் பெறலாம். ஆகவே ஆறறிவு படைத்த மனிதர்களா கிய நாம் அன்னப்பறவை பாலிலிருந்து நீரைப் பிரித்தறிவது போல விஞ்ஞானத்தி னின்றும் அதன் நன்மைகளை மெய்ஞ் ஞானத்தின் துணைகொண்டு அருந்தி மகிழ்வோம்.

அறிவியற் துறையால் ஆயுதம் செய்து உத்தியும் முத்தியும்

சித்தியும் பெறலாம்
அறிவியற்துறை மூலம் ஆக்கிரமிப்பதால்
உயிரையும் மாய்க்கலாம்
அறிவியற் துறையில் நிதர்சனங
காண்பதும

அறிவியற் துறையில் நிழலாய்
வாழ்வதும்
எமது கைகளில்! அது
எமது கைகளில்!

மதுரமி காந்தன்
தரம் 11

புதுயுகம் புனைய வந்த புதுமைப்பெண்

பெண் எனப்படுபவள் எங்கும் செழிப்பினையும் வளத்தினையும் உண்டாக்குபவள் எனும் நோக்கில் படைக்கப்பட்டாள். கடவுள் மனிதனைப் படைத்த போது ஓர் ஆணினைப் படைத்தான். அவனுடைய சுகதுக்கங்களை பகிர்ந்து கொள்ள பெண் எனும் மகத்தான படைப்பினை இப் பூமிதனில் உருவாக்கினான் எனலாம்.

அன்றைய காலங்களில் பெண்கள் ஆண்களினுடைய பல்வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே பயன்படுத்தப்பட்டாள். பருவம் வந்த வுடனே மணம்! பால்மனம் மாறாத வேளையிலே புதியதொரு இனம் புரியாத பந்தத்திற்குள் பிணைக்கப்பட்ட அப்பெண்ணினுடைய மனநிலை மிகவும் சொல்லமுடியாத வேதனையை அனுபவித்திருக்கும் என்பதனை உறுதியாகச் சொல்ல முடியும். தனது இளம் கணவன் இறந்தவுடன் அவனுடைய உடலை எரித்த இடத்தில் தானும் மாளுதல், என்ற உடன்கட்டை ஏறும் மரபை உருவாக்கிய வர்கள் நிச்சயமாக கருங்கல்லிலான நெஞ்சினை உடையவராக இருந்திருக்க வேண்டும்.

பெண்ணினத்தின் பெருமையை ''புதுமைப் பெண்'' எனும் வடிவில் உலகறிய வைத்தவன் பாரதியே என்பதனை எவரும் மறுக்க முடியாது. ''அடுக்களையிலிருந்து நீ புகை ஊதியது போதும் பெண்ணே, அடுக்களைகளைந்து புதுயுகம் படைப்போம்'' என பெண்ணினத்திற் காகக் குரல் கொடுத்தான். பாரதி காட்டிய அறிவு வழியினைச் சூனியத்தால் மண்டியிருந்த உலகம் உணரத் தொடங்கியது. சிறிது சிறிதாகப் பெண்கள்மீது கொண்டிருந்த அடக்குமுறையை ''அறியாமையினால் மண்டிப்போன உலகம்'' தகர்த்ததத் தொடங்கியது. ''அடுப்பூதும் பெண்களிற்கு படிப்பெதற்கு'' எனக் கேட்ட சமுதாயத்தை ''உண்மைதனை அறியாயோ மானிடா? பெண்மைதனை இகழ்ந்து விட்டால் நீ கண்ணியத்தை இழந்து விடு வாய்'' எனப் பாரதி தன்னுடைய அனல் போல் கக்கும் கவிதைகளின் மூலம் உணர வைத்தான்.

பெண்ணினம் கூட்டிலிருந்து விடுபட்ட சிட்டுக்குருவி போல் தனக்குக் கிடைத்த எல்லையற்ற சுதந்திரத்தை எண்ணிச் சிட்டாய்ப் பறந்தது குடத்துள் விளக்குப்போல இதுவரை காலமும் மறைந்திருந்த அளவிடமுடியாத பெண்களினுடைய திறமை சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கியது. நீங்களே சொல்லுங்கள்! இன்று பெண்கள் இல்லாத துறையேது? நிலாவைப்பார்த்து குழந்தைகளுக்கு சோறூட்டிய பெண்கள் இன்று நிலாவரை சென்று தம் புகழை நாட்டிவிட்டு வருகின்றனர். வலன்ரினா தெரஸ் கோவாவின் துணிச்சலைக் கண்டு உலகமே மெய்சிலிர்க்க வில்லையா.? அன்னை தெரேசாவின்

கருணையை எண்ணி எல்லோரும் மலைக்கவில்லையா? கல்பனா சாவ்லாவின் துயர்தனை எண்ணி உலகமே கண்ணீர் சிந்தவில்லையா? இவர்களெல்லாம் பெண்ணியத்தின் கண்ணியத்தை உலகோர் அறியச் செய்த பெண்மணிகளே! இன்றைய நவீன யுகத்தில் மட்டுமா பெண்கள் தங்களுடைய சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். ஆதிகாலத்திலேயே, நாம் இன்று படித்துச்சுவைக்கும் நன்னெறியைப் போதிக்கும் நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை போன்றவற்றை அருளிச் செய்த ஔவையார், பூதப்பாண்டியன், பெருந்தேவியார் போன்றவர்கள் தமது கல்விப் புலமையை நிலை நாட்டிவிட்டு சென்றுள்ளனர்.

பெண்களுடைய முன்னேற்றத்தைக் கண்டு அவர்களுக்கு இந்தச் சமூகத்தில் இழைக்கப்படும் கொடுமைகள் நின்றுவிட்டன என எண்ணிவிடாதீர். அன்றைவிடப் பயங்கரமான கொடுமைகள் இன்று இழைக்கப்படுகின்றன. ''வஞ்சனையும் சூதும் நெஞ்சமிகு கொண்ட மாந்தர் இவர்'' என ஒரு புலவன் கூறியதற்கிணங்க பணத்திற்காக ஆண்வர்க்கம் அதிக சீதனம் கேட்கும் காலம் இது இன்று தற்கொலைகளும் விவாகரத்துக்களும் மலிந்துவிட்டன. கணவனை இழந்த பெண் மறுமணம் செய்யச் சட்டம் இடம் கொடினும் நாக்கெனும் கொடிய ஆயுதத்தால் வார்த்தைகள் பேசும் உலகம் இது.

கடவுளுடைய அற்புதப் படைப்பே! கடலினைப்போல் நீ அமைதியோடு நோக்கியது போதும்! புறப்படு! அடிமை யுணர்வை தகர்த்தெறி! பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய் பொங்கியெழு! சூதுமிகு சமுதாயத்தில் நீ சூறாவளியாய் மாறிவிடு! சுடர் வீசும் உன் மதியை மழுங்கடிப்போர்க்கு, துடிப்பான உன் எண்ண அலைகளில் தீயை வீசுபவர்க்கு, உன்னை வெறும் பொம்மை போல ஆட்டுவிப்போர்க்கு, உன் உத்தமத்தை உணர்வி! கண்ணியத்தை உணர்வி! மேன்மையை உணர்வி! இப் பூவுலகம் உன் மகத்துவம் கொண்டு உன் புகழ் பாட வைப்பாய்.

புதுமைப் பெண்ணினமே!
புதுயுகந்தனிலே - உன்
மகத்துவத்தை புகுவிப்பாய்!

மாதர் ஒன்றாய் கூடியே!
மாண்புமிகு சமுதாயத்தை
மாட்சியுடன் உருவாக்கிடுவோம்!
செழிப்புற வாழ்ந்திடுவோம்.

அபிரா சற்குணநாதன்
தரம் 11

தகவல் தொடர்பாடலும் நவீன உலகும்

ஆதிகாலம் தொடக்கம் இன்று வரை விஞ்ஞானம் புரிந்த விந்தைகள் பல தொடர்பாடல், போக்குவரத்து, கல்வி, விவசாயம் எனப்பல துறைகளிலும் வியத்தகு விந்தைகளை மேற்கொண்டுள்ளது. எனினும் இன்றைய நவீன உலகிலே முக்கிய இடம் வகிக்கும் தொடர்பாடல் துறையினைப் பற்றி சிந்திக்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும்.

கற்கால மனிதன் பறவைகளையும், மிருகங்களையும் பயன்படுத்தி தன்

College Activities

The Grade 10 Educational Tour out of Jaffna

8.10.2010 - 10.10.1010

At the Parakrama Samudra

In the vicinity of the Brazen Palace

In the surroundings of the Gal Vihare

At the base of the Jethavanarama Vihare

Boarders' Day - 19.12.2010

The Nativity



A Ribbon Dance

A scene from a social play

Gift to the Hostel from Risho Kosei Kai, a Japanese Buddhist Organization - 27.09.2010

Donation of books to the hostel library

Handing over a cash gift for the purchase of a 29" T.V and games equipment



A Dance Recital

Rev. Yam Moto of the organization with some hostellers

தேவைகளைப் பரிமாறி நிவர்த்தி செய் தான். இங்கு மொழி முக்கிய இடம் வகிக்கவில்லை. தொடர்ந்து ஏற்பட்ட மொழி வளர்ச்சியால் தொடர்பாடலின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியது. விஞ்ஞானத்தின் படைப்பாய் அலெக்சாண்டர் கிரஹம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்த மையைத் தொடர்ந்து தொடர்பாடல் துறை மேலும் விரிவடைந்து இன்று உலகினையே வல்லமை செய்யும் ஆற்றல்மிக்கதாய் வளர்ந்துள்ளது.

ஒரு நாணயத்திற்கு தலையும் பூவும் சரிசமமாய் காணப்படுவதுபோல நன்மையும் தீமையும் எச்செயலுக்கும் காணப்படவே செய்யும். தொடர்பாடல் ஒன்றும் விதிவிலக்கு அல்ல. இன்றைய நவீன விஞ்ஞான உலகிலே தகவல் தொடர்பாடலின் பங்கு முக்கிய இடம் பெறுகின்றது. வல்லரசு நாடான அமெரிக் காவில் தொடங்கி மிகச்சிறிய நாடான வத்திக்கான் வரையும் தொடர்பாடலில் தாக்கம் இருக்கத்தான் செய்கின்றது.

அன்றைய மனிதன் ஒரு தகவ லைத் தொலைதேசம் தெரிவிப்பதற்குப் பல நாள் காத்திருந்தான் ஆனால் இன்று ஒரு நிமிடமென்ன செக்கன் கூடக் காத்திருக்கத்தேவையில்லை. அன்று தொலைநாட்டிற்குச் செல்லத் தயங்கிய மனிதன் இன்று விண்வெளியில்... ஏன்? வேற்றுக்கிரகங்களில்! இவை யெல்லாம் எதன் மூலம் வித்திடப்பட்டன?

நவீன உலகினை ஆட்டிப்டைக் கும் தொடர்பாடல் சாதனங்களாக தொலை பேசி, இணையம் போன்றவற்றைப் பிரதானமாகக் கூறலாம். இவற்றினால் உலகம் இன்று ஒரு சிறிய கிராமமாக சுருங்கிவிட்டது எனக்கூறமுடிகின்றது.

உலகினையே எம் கைகளுக் குள அடக்கிய பெருமை தொலைபேசி யையே சாரும். இடம், நேரம் எதுவும் தடையின்றி இலகுவான முறையில் பயன்படுத்தக் கூடிய இச்சாதனம் இன்று ஓய்வு நேரத்திற்குக் கூட விருந்தாய் அமைகின்றது. வெளி நாட்டிலோ, உள்நாட்டிலோ இருக்கும் ஒருவருடன் முகம் பார்த்துப் பேசக்கூடிய வசதிகள் கூட இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு நன்மைகள் பல புரிந்து வருகின்ற தொலைபேசி, தொல்லை தரும் பேசியாகக்கூட இன்றைய நவீன உலகிலே வலம் வருகின்றது. இதற் கெல்லாம் காரணம் அளவு கடந்த கைத் தொலை பேசியின் பாவனையே ஆகும். கொலை மிரட்டல்களும், பணப்பறிப்புக்க ளும் எதன் மூலம் விடுக்கப்படுகின்றன? இவையெல்லாம் தொடர்பாடலின் பாதக மான விளைவுகள் தானே?

தொலைபேசியைத் தொடர்ந்து உலகினை ஆட்டிப்படைத்துக் கொண்டி ருப்பது இணையம். இற்றைக்குப்பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு சில பெரிய தலைவர்களும், நிறுவனங்களுமே இணை யதளத்தினை பயன்படுத்தின. ஆனால் இன்று அனைவருமே தனக்கென்று ஒரு இணையதள முகவரியோடு அலைகின்ற னர். இணையத்தின் மூலம் நாம் எங்கெங்கோ மூலை முடுக்குகளிலெல்லாம் இடம்பெறும் தகவல்களை உடனுக்குடன விளக்கமாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. கல்வி கற்கும் மாணவர்களுக்கும், வேலை வாய்ப்பு தேடுபவர்களுக்கும், மேலும் பல விடயங்கள் பற்றி ஆராய்பவர்களுக் கும் இணையம் மிக முக்கியமாக அமைகின்றது.

ஆனாலும் இன்றைய உலகிலே இணையதளத்திலே பல தேவையற்ற வீண் விடயங்களும் வெளியாகின்றன.

எதிர்காலம் போற்ற வாழவேண்டிய இளைஞர் சமுதாயம் இதனால் பாதிப்படைகின்றது.

பூமியைத் தொடர்பாடல் மூலம் ஆக்கிரமித்த நவீன மனிதன் விண்வெளியைக்கூட ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டான். அதற்காகச் செய்மதியை அவன் ஊடகமாகக் கையாண்டான். விண்வெளி ஓடங்கள் மூலமும் எறிகணைகள் மூலமும் விண்ணுக்குச் செய்மதியை அனுப்பி அவன் பெற்றுக்கொண்ட தகவல்கள் மூலம் மனிதர்களைக்கூட வேற்றுக்கிரகங்களுக்கு அனுப்பி அங்கு தான் வாழ்வதற்கான சூழ்நிலைகளை ஆராய்ந்து வருகிறான். இன்றைய மனிதன் விரைவில் எங்கும் காலடிப்பான் என்பது தொடர் பாடலின வளர்ச்சியினூடாக அறிய முடிகின்றது.

எனவே, தகவல் தொழில்நுட்பமானது இன்றைய உலகிலே நன்மைகளை பெரிதும் புரிந்தாலும் பயன்படுத்தும் கைகளினால் தீமைக்கும் வழிவகுக்கின்றது. எனினும் இன்றைய உலகினை தகவல் தெடர்பாடலின்றி சிந்தித்துப் பார்ப்பதென்பது முடியாத ஒன்றாகின்றது. வாழ்வில் பின்னிப்பிணைந்துள்ளது. இன்றைய நவீன தகவல் தொடர்பாடல்.

கீர்த்திகா சிவலோகநாதன்
2011 (கணிதம்)

அனைவருக்கும் கல்வி

'கல்வி என்ற தலைப்பில் பல விடயங்களைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். கல்வியின் பயன்பாட்டை அறியாதவர்கள் இல்லை என்றே கூறும் அளவிற்கு மக்கள் கல்வி பற்றிய எண்ணக்கரு உள்ளவர்களாக விளங்குகின்றனர். இருப்பினும் அனைத்து மக்களும் கல்வி யறிவு உடையவர்களா என்று கேட்பின் அதற்குப் பதில் இல்லை என்பதாகும். கல்விகற்றவர்களால் கிடைக்கும் பயனை நன்குணர்ந்த அரசுகள் கல்விக்காகப் பெருமளவான பணத்தை செலவழிக்கின்றன. இருப்பினும் இக்குறை தீர்ந்த வண்ணம் இல்லை.

நாம் வாழும் சமுகம் பல ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டது. செல்வந்தர், வறியவர், கல்விகற்றோர், கல்லாதவர் எனக் கூறிக்கொண்டே செல்லலாம்.

ஒரு சமூகத்தில் ஒரு பகுதி மக்கள மட்டும் கல்வி கற்றவர்களாய் இருப்பதும் மறுபகுதியினர் கல்லாதவர்களாய் இருப்பதும் அச்சமூகத்திற்கு மாபெரும் இழுக்காகும். சிறந்தொரு சமூகம் படைக்க வேண்டுமாயின் அனைத்து மக்களும் கல்வியறிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். நல்லதொரு சமூகம் ஒன்றினால் தான் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். இதன் காரணமாகத்தான் பல நாடுகள் அனைவருக்கும் இலவசக்கல்வியை வழங்க முற்படுகின்றன.

இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள். பல இளைஞர் கள் கல்வி கற்க முடியாமல் போவதற்கு அவர்களது குடும்ப வறுமை, அறியாமை என்பன காரணமாகின்றன. பல மாணவர்கள் தங்கள் வறுமை காரண மாகக் கல்வியைக் கைவிடுகின்றனர்.

''எளிமையினால் ஒரு தமிழன் படிப்

பில்லை என்றால் இங்குள்ள
எல்லோரும் இழிவுற வேண்டும்''

என்று பாரதிதாசன் கூறுகின்றார்.

வறுமை ஒரு மாணவனுக்கு கல்வியைத் தொடரத் தடையாகக் காணப்படுமாயின் அது அச்சமூகத்திற்கே இழுக்காகும். சில பெற்றோர் அறியாமை காரணமாகவும் தமது பிள்ளைகளைக் கல்வி பயிற்றத் தவறிவிடுகின்றனர். இதனால் அப்பிள்ளைகளின் வருங்காலநிலை என்ன?

''கண்ணுடையோர் என்போர் கற்றோர் - முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்''

என்பது வள்ளுவன் வாக்கு. கல்வி கற்றோரால் மட்டுமே ஒளிபடைத்த சமூகத்தினைக் கட்டியெழுப்ப முடியும். அனைவருக்கும் கல்வி என்பது தொடர்பாக நோக்கும்போது அனைவருக்கும் எழுத வாசிக்கத் தெரிந்தால் மாத்திரம் போதுமன்று. அது தவறு. எவனொருவன் தான் பெற்ற கல்வியால் தன்னையும் சமூகத்தையும் முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்கிறானோ அவனே கல்வியறிவு பெற்றோனாவான். இன்றைய சூழல் கல்வி புகட்டுவதில்கூட ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துகின்றது.

ஆரம்ப காலங்களில் கல்வி ஆண்களுக்கு மட்டுமே சொந்தம். பெண்களுக்கு இல்லை என்ற நிலை காணப்பட்டது. இன்று ஆண்களைவிட பெண்கள் கல்வியில் அதிகம் சாதனை புரிகின்றனர்.

நகர்ப்புற பாடசாலைகளில் கிடைக்கும் கற்கைக்கான வசதிவாய்ப்புக்கள் கிராமப் பாடசாலைகளில் அதிகம் இல்லை. வசதியுடைய மாணவர்கள் அனுபவிப்பவை வறியமாணவர்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளன. இந்த நிலை மாற வேண்டும்.

அனைவருக்கும் கல்வி என்பதனை தொகுத்து நோக்கும் போது ஏழை, பணக்காரர், ஆண், பெண், கிராமம், நகரம் என்ற வேறுபாடின்றி யாவருக்கும் கல்வி வாய்ப்புக்கள் சரிசமமாக வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு கிடைக்கப்பெறும் கல்வி வாய்ப்புக்களை ஒவ்வொருவரும் திறமையாகப் பயன்படுத்தி தன்னையும் தன்னைச் சுற்றி இருப்போரையும் தனது நாட்டையும் முன்னேற்றமடையச் செய்யவேண்டும். அதுவே ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமையாகும்.

கருத்துடனே கற்போம்
கற்றபடி வாழவோம்
அனைவரையும் வாழவைப்போம்.

சௌதாமினி நடேசபிள்ளை
2011 (உயிரியல்)

வியத்தகு விஞ்ஞானம்

இறைவனின் படைப்புக்களுள் ஆறறிவுடைய இனம் மனித இனமேயாகும். ஏனைய உயிரினங்களைவிட சிந்திக்கும் ஆற்றல் உள்ளது மனித இனம் எனக் கூறப்படுகின்றது. தக்கன இவை தகாதன இவை எனப்பிரித்தறியும் பகுத்தறிவு மனிதனுடன் கூடப் பிறந்தது. இல்வாற்றலினால் மனிதனுடைய பகுத்தறிவு, சிந்தனை, ஆராய்ச்சி ஆகியவற்றின் மூலம் கொண்ட வல்லமையே விஞ்ஞானம் தோன்றக் காரணமாயிற்று.

விஞ்ஞானம் மிகவும் பழமை மிக்க தெனலாம். இவ்வுலகிற்கு நெருப் பினை உண்டாக்கி அதன் உப யோகத்தை முதன் முதலில் கண்டறிந்த ஆதி மனிதனே முதலாவது விஞ்ஞானி எனக் கூறலாம். ஆதலால் விஞ்ஞானம் பல நூறாயிரம் வருடங்களுக்கு முற்பட் டது எனக் கூறமுடியும். விஞ்ஞானம் 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் நல்ல தொரு வளர்ச்சி கண்டு 20ஆம், 21ஆம் நூற்றாண்டுகளில் அசுர வேகத்தில் உயர்ந்து இன்று உச்ச பரிமாணத்தின் தோற்றப்பாடாக திகழ்கிறது என்று கூறுவது மிகையாகாது. இன்று அணு வின் கரு முதல் விண்ணின் கருத்துளை வரையிலும் கண்டுள்ள விஞ்ஞான வளர்ச்சியின் மாற்றங்கள் விஞ்ஞான மானது, நுண்ணிய அணுமுதல் நூதனமான விண்ணியல் வரை கால் பதித்துள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது.

இன்றைய உலகில் மனிதனது தினசரி வாழ்வின் பல செயற்பாடு களை பல வசதிகள் கொண்டதாக மாற்றிய மைத்துக் கொடுத்துள்ளமை விஞ்ஞானத் தின் விந்தை எனலாம். மின்வலு மூலம், உணவு தயாரிக்கும் சமையலறை முதல் அலுவலகங்கள் வரை வாழ்வின் செயற்பாடுகளை இலகுவாக்கி, ஒளிமயமானதாக்க விஞ்ஞானம் மிகவும் உதவுகின்றது.

முன்னைய காலத்தில் தகவல் தெரிவிக்க ''புறாத்தூது'' அனுப்பினர் என்பது வரலாறாகும். தற்போது விஞ்ஞான விந்தையினால் தொலை பேசி, தந்திபோன்றவற்றைக் கண்டு பிடித்தமையால் மக்களது தொடர்பாடல் இலகுவாக மாறியது. மேலும் நவீன விஞ்ஞான பரிமாண வளர்ச்சியினால் இலத்திரனியல் செய்தி பரிமாற்றத்தின் மூலம் ''இன்ரநெற், ஈமெயில்'', மற்றும் கணனி மூலம் நேரில் பார்த்து வெளிநாட்டவருடன் உரையாடுதல் போன்ற வசதிகள் மனித வாழ்வில் கிடைத்துள்ளன.

அறிவினைப் பெருக்க நூலகங் களை நாடிச் சென்ற காலம் மாறி இன்று இணையத்தின் உதவியுடன் உலக நடப் புக்கள், பலவித துறைகள் சார்ந்த அறி வியல் உண்மைகளை மக்கள் அறிகின் றார்கள். விஞ்ஞானம் மின்சார இயக்கத் திற்கான முக்கியத்துவத்தை தரும்வேளை, 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞான அதிதுரித வளாச்சியின் மைல் கல்லா கணனி அமைந்துள் ளதுடன் இன்று கணனி, உலகின் அனைத்து துறை களிலும் முக்கிய பங்குவகிக்கின்றது.

போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால் நிலப்பரப்பை நடந்தும் நீர்ப்பரப்பை நீந்தியும் ஆரம்பகாலத்தில் மனிதர்கள் மிகவும் சிரமத்துடன் பயணத்தை மேற்கொண்ட னர். தற்போது விஞ்ஞான வளர்ச்சி யினால் நிலப்பரப்பை மோட்டார்வண்டி, புகைவண்டி போன்றவற்றினாலும் நீர்ப்பரப்பை விசைப்படகு, கப்பல் போன் றவற்றினாலும் ஆகாய விமானம் மூலம் வான்வெளியிலும் பயணங்களை மேற்கொள்கின்றனர். இது மட்டுமன்றி விண்வெளியில் ராக்கட் செலுத்தி சந்திரனில் கால் பதித்தமையும், செய்மதி கோள்களை விண்ணில் செலுத்தி விண்ணிலே வலம்வரச் செய்தமையும், விண்ணிலே துணைக்கோள்கள் மற்றும் ஆய்வுகோள்களை அனுப்பி புவியில் ஏற்படும் மாற்றங்களை அறிய செய்தி கள் பெற்றுக்கொள்கின்றமையும், எனப்

பல விந்தைகளை விஞ்ஞானம விண் ணிலே செய்கின்றது எனலாம்.

மனித வாழ்வில் பின்னிப்பிணைந் துள்ள விஞ்ஞானம் மருத்துவத்துறையி லும் விந்தைகளை ஏற்படுத்தி வருகின் றது. புதிய தொழில்நுட்பங்கள் வைத்தி யத்துறையில் புகுத்தப்பட்டு நவீன உப கரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. செயலிழந்த மனித உடலின் பாகங் களை மாற்றக்கூடிய வல்லமையை விஞ ஞானம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை சிறப்பம்சமாகக் கருதலாம்.

விஞ்ஞானத்தின் பயனாக வளர்ந் துள்ள தொழில்நுட்பம், மனிதர்களின் அன்றாட வாழ்விற்கு மிகவும் பயனுள்ள தாக அமைவது மட்டுமன்றி சில பாத கமான விளைவுகளையும் ஏற்படுத்துகின் றது. வாகனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றிலிருந்து வெளிவிடப்படும் புகை, ஏனைய கழிவுகள் என்பன சுற்றுச் சூழலை மாசுபடுத்தி பாதகமான விளை வுகளை ஏற்படுத்துகின்றன. விஞ்ஞானத் தின் வளாச்சியில் மிக முக்கியமான கண்டுபிடிப்புக்களான அணு ஆயுதங்கள் உலகினையே ஆட்டிப்படைக்கும் ஒரு பயங்கரமான நிலையை உருவாக்கி உள்ளன.

நியூட்டனின் மூன்றாவது விதி கூறுவதைப் போன்று ''எந்த விசைக்கும் எதிரும் சமமுமான மறுதாக்கம் இருக் கும்'' என்பதைப் போன்று விஞ்ஞானத் தின் அதிதுரித வளாச்சியானது பலதரப்பட்ட ஆக்கபூர்வமான பாதை களை நோக்கி வளாச்சியடைந்தாலும் ஒரு சில பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே விஞ்ஞானத்தின் வளர்ச்சியை என்றும் ஆக்கத் தொழிற்பாடாக செயற்படுத்த முயல்வதே எமது நோக்கமாக இருத்தல் அவசியமாகும்.

நிவேதா முத்துக்கிருஷ்ணன்
தரம் 13 (உயிரியல்)

காலைப் பொழுதினிலே

காலைப் பொழுது என்பது இனி மையான மகிழ்ச்சிகரமான பொழுது மட்டுமன்றி ஓர் புதிய நாளை தொடக்கி வைப்பதாகவும் அமைகின்றது.

உலகத்தையே ஒளிமயமாக்க தங்கத்தட்டுப்போல சூரியன் மேலே எழு கிறான். சூரியனை வரவேற்பதற்காகவும் எம்மை நித்திரைவிட்டு எழுப்புவதற்காக வும் சேவல் கூவுகின்றது. அது மட்டு மன்றி மொட்டுக்கள் பூக்களாக மலர்கின் றன, பறவைகள் இனிய கானம் பாடுகின்றன. அமைதியை அகற்றுவது போலத் தூய்மை நிறைந்த கோயிலில் பூசைக் காக மணி அடிக்கிறது. இவை எல்லாம் மனதைக் குளிர்ச்சியாக்குகின்றன.

இவை எல்லாவற்றையும் விட பனித் துளிகள் தாமரை இலைகளிலும் வேறு பல மரங்களிலும் பூக்களிலும் காணப்படு கின்றன. இவைகளும் மனதிற்கு இத மளிக்கின்றன. மரக்கிளைகளினூடாக சூரியனின் கதிர்கள் கண்ணைக் கூச வைக்கின்றன. இயற்கை அன்னையின் அதிசயங்களை ரசித்தவண்ணம் தத்த மது வேலைகளில் ஈடுபடுகின்றார்கள் மக்கள். விவசாயிகள், வயல் வெளியை நோக்கியும், சிறுவர் சிறுமியர் வரிசையா கப் பாடசாலை நோக்கியும், தொழிலா ளர்கள் தொழில் புரியும் இடத்தை நோக்

கியும் செல்கின்றனர். பறவைகள் தமக்கும் தமது குஞ்சுகளிற்கும் உணவு தேடிப் புறப்படுகின்றன. பறவைகள் மட்டுமன்றி பசுக்களும் பசுமையான புல்வெளி நோக்கி உணவு தேடிச் செல்கின்றன. காலையில் தேவையற்ற காரியங்களைத் தவிர்த்துக்கொள்வது மிக அவசியமாகும்.

அதிசயங்களும் புத்துணர்ச்சியும் நிறைந்த மகிழ்ச்சிகரமான காலைப் பொழுதே ஒரு நாளைத் தொடக்குகிறது என்பதை உணர்ந்து இப் பொழுதை பயன் உள்ளதாக ஆக்குவது எமது கைகள்தான்.

தனுஷா பிரபாகரன்
தரம் 6

கிராமத்தின் அழகு

காலையிலே கதிரவன் உலகைப் போர்த்தி இருந்த இருள் படலத்தை தன் தங்கக் கலப்பையால் உழுங் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். கூட்டங் கூட்டமாகவும் தனித்தனியாகவும் பாடிக்கொண்டே பறக்கும் பறவைகளின் இனிய ஒலியைக் கேட்டால் நமக்கு பசி கூடத் தோன்றுவதில்லை. இயற்கைப் பொருட்களில் எத்தனையோ அழகோவியங்களை இறைவன் தீட்டித் தந்திருக்கிறார். அதை நேரடியாக அனுபவிப்பது மிகுந்த இன்பம் தருவதாகும். அதனை நாம் கிராமத்திலேயே காணலாம்.

பச்சைப் பசேலென படர்ந்திருக்கும் வயல்வெளிகள், கண்ணையும் கருத்தையும் கவரும் பூங்கனிச்சோலைகள், பாய்ந்தோடும் அருவிகள் எம்மைக் கவருகின்றன. வெண்குவியல்களாக இருக்கும் முகில் கூட்டங்களும், பூவில் தேனை அருந்தும் வண்டுகளின் ரீங்காரமும் நம்மைப் பரவசப்படுத்துகின்றன. கிராமத்தில் பொதுவாக போட்டி, பொறாமை குறைவு. இங்கு வசிக்கும் மக்கள் விவசாயத்தை நம்பியே பெரிதும் வாழுகின்றனர்.

இரவுப்பொழுதிலே விண்மீன்களையும் தன்னொளி தரும் திங்களையும் பார்க்கும் போது கண்கொள்ளாக் காட்சியாகும். அங்கு இருக்கும் வீடுகள் நகரத்தில் இருக்கும் வீடுகள் போல நெருக்கமாக இருக்காது. மக்களிடம் ஒற்றுமை அதிகம் இருக்கும்.

துன்பம் வரும்போது ஒருவருக்கொருவர் உதவுபவர்களாக இருப்பார்கள். நகர வாழ்க்கையுடன் ஒப்பிடும் போது வாழ்க்கை வசதிகள் கிராமத்தில் குறைவுதான். ஆனாலும் அமைதியாகவும் இனிமையாகவும் வாழ விரும்புபவர்கள் கிராமத்தையே நாடுவர்.

தீபிகா அருளானந்தம்
தரம் 7

நவில் தொறும் நயம் தரும் நல் நூல்கள்

இன்றைய நவீன காலத்தில் மக்கள் விஞ்ஞான வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் புத்தகங்களை வாசிப்பதில்லை. அதனால் அவர்களது வாசிக்கும் ஆற்றல், அறிவை வளர்த்துக் கொள்ளும்திறன் என்பன சிதைந்து போய் விடுகின்றது.

நாம் வாசிப்பதால் மிகவும் பூரணத்துவம் அடைகிறோம். ஆதலால்

வாசிப்பதை நாம் நிறுத்திவிடக் கூடாது. நல்ல நிறைவான நூல்களை வாசித்துப் பயன்களைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும். எமது அறிவை மென்மேலும் விருத்தியடையச் செய்வதற்காக நாம் நூல்களை வாசிக்க வேண்டும்.

நூல்களை பொக்கிஷங்களாக நூலக நிலையங்களில் வைத்துள்ளனர். அங்கு சென்று அவற்றை வாசித்துப் பயன்பெற நாம் முயல வேண்டும். நாம் தொடர்பாடல் ஒன்றை மேற்கொள்வ தற்கு எமக்கு மொழி தெரிதல் மிக அவசியமான ஒன்றாகும். அம்மொழி களை நாம் அறிய நூல்களை வாசித் தல் ஒரு எளிமையான சிறந்த வழி யாகும்.

எமது பொழுதினை வீணாக்கா மல் நூல்களை வாசித்துப் பயன்பெற வேண்டும். நேரம் பொன்னானது. வீணா கக் கழிந்து போகும் நேரம் நாம் விரும் பினாலும் எம் கண்முன்னே திரும்பி வராது. ஆதலால் எமது நேரத்தை வாசிப்பதில் செலவிடுதல் பயனான செயல் ஆகும்.

நூலகம் ஒன்றிற்குச் சென்று புத் தகங்களைத் தினந்தோறும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். வாசிப்பதன் மூலமே மனிதன் மிகவும் பூரணம் அடைகிறான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நவில் தொறும் நயம் தரும் நல் நூல்களை வாசிப்பதன் மூலம் நாம் வாழ்வில் உயர்வு அடையலாம். வாழ்க்கையில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் எமது வாழ்வை உயர்த்துவதா கவே அமையவேண்டும். தாழ்த்துவதாக அல்ல. ஆதலால் நயம் தரு நல் நூல்களை என்றும் வாசித்து நலம் பெறுவோம். 'கல்வியே சிறந்த செல்வம்'. நூல்களை வாசிப்பதன் மூலம் எமது கல்வி அறிவை நாம் பெருக்கிக் கொள்ளலாம். பாடசாலை மற்றும் கல்வி நிலையங்களுக்குச் சென்று மட்டுமே கல்வியறிவை வளர்க்கலாம் என நாம் எண்ணக்கூடாது. இவ்வாறான நூல்க ளைக் கற்பதன் மூலமும் நாம் கல்வி அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

கற்றவருக்குச் சென்ற இடமெல் லாம் சிறப்பு என்பதை நாம் அறிவோம். பயன்தரும் நல் நூல்களை வாசித்து எமது சிறப்பையும் எமது அறிவையும் பெருக்கிக்கொள்வோம்.

சிமோனி அன்ரனிதாஸ்
தரம் 10

நல்லொழுக்கம் நன்மை தரும்

மனிதனாகப் பிறந்தாலே அவன் கடைப்பிடிக்க வேண்டியது நல்லொழுக் கம் தான். ஆறறிவு படைத்த மனிதனை யும், ஐந்தறிவு படைத்த விலங்குகளை யும் பிரித்துக்காட்டுவதே ஒரு மனிதனின் நடத்தைகளும் அவன் பின்பற்றும் பழக் கவழக்கங்களுமாகும். அவன் எவ்வளவு படித்திருந்தாலும் சரி, அவன் எப்படிப் பட்ட செல்வந்தனாக இருந்தாலும் சரி, அவன் ஒழுக்கத்தை பின்பற்றத் தவறி விட்டானேயானால் சமுதாயம் அவனை ஏறெடுத்தும் பார்க்காது.

நல்லொழுக்கம் என்பது நாம் சுவாசிக்கும் மூச்சுக்காற்று போன்றது. அது இல்லையேயானால் நாம் உயிர் வாழ முடியாது. மனிதன் ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ளும் அத்திவாரமே அவ னது குடும்பம் தான்.

